இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 26 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 18 – திங்கள்கிழமை 04 செப்டம்பர் 2023 – சென்னை 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 26: Thiruvalluvar Year - 2054 - Aavani 18 - Monday 04 September 2023 - Chennai 12+8 Pages ₹5.00




## வேலூரில் கழகத்தின் பவளவிழா...

# வெற்றிக்கு அச்சாரமிடும் முப்பெரும் விழா!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் கழகப் பவளவிழா – முப்பெரும் விழா அழைப்பு மடல்.**

கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த பொதுக் கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரமாயிரம் பொதுமக்கள் முன்பாக, “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது” என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1949-இல் அவர் உருவாக்கிய இயக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு, அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு, இன்று உங்களில் ஒருவனான என் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற வேளையில், கழகம் தனது 75-ஆம் ஆண்டில் பெருமிதத்துடன் அடியெடுத்து வைக்கிறது.

**ஒரு மாநிலக் கட்சி முக்கால் நூற்றாண்டு காலம் தன் மக்களின் நலன் காக்க உறுதியாகப் போராடியும், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சியால் அந்த மாநிலத்தில் மக்களின் பேராதரவுடன் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியும், இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்தும், சட்டங்களை உருவாக்கியும் இன்று இந்தியாவை வழிநடத்தக்கூடிய வகையில் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றும் திகழ்கிறது என்றால் அந்தப் பெருமை நம் உயிராகவும், உதிரமாக வும் திகழ்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரியது. இந்த வரலாற்றுப் பெருமையில், உடன்பிறப்புகளாம் உங்கள் ஒவ்வொருவரின் பங்கும் அளப்பரியது.**

உங்களில் ஒருவனான நான் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையிலும் மும்பையில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட தலைவர்களால் வரவேற்கப்பட்டேன். ஜனநாயக விரோத – மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசை யாரும் எதிர்த்து நிற்க முடியாது என்று இந்தியா கூட்டணியின் முதல் கூட்டத்தை பாட்னாவில் உருவாக்கியபோது ஏளனம் பேசினார்கள். ‘இது ஃபோட்டோ செஷன்’ என்று நகையாடினார் ஒன்றிய உள்துறை அமைச்சர். நகையாடியவர்களின் கண்களில் பயமாடுவதை பெங்களூரு நகரில் நடந்த இந்தியா கூட்டணியின் இரண்டாவது கூட்டத்தில் காண முடிந்தது. அதன் பிறகு, இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பை மாநகரில் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும் அதில் மேலும் பல கட்சிகள் இணையும் என்றும் அறிவிக்கப்பட்டபோது, பா.ஜ.க அரசின் பயத்தின் விளைவை சமையல் கேஸ் சிலிண்டர் விலைக் குறைப்பு நாடகம் அம்பலப்படுத்திவிட்டது.

**சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7-ஆம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி – மாநில உரிமை – பன்முகத்தன்மை கொண்ட வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.**

**10 ஆண்டு காலமாக இந்தியாவை மதத்தின் பெயரால் பாழ்படுத்தி, கடும் விலையேற்றத்தால் மக்களை வதைத்து, அவரவர் தாய்மொழியையும் மாநில உரிமைகளையும் நசுக்கி, பன்முகத்தன்மை கொண்ட பண்பாட்டு உணர்வுகளை ஒடுக்கி, ஒரே நாடு – ஒரே மொழி – ஒரே தேர்தல் – ஒரே உணவு என்ற சர்வாதிகாரத்தனத்தை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக இந்தியா கூட்டணியில் இணைந்திருப்பவை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிற வாக்காளர்களும்தான்.**

இந்த ஒற்றுமை உணர்வை ஒரு முகப்படுத்தி, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே, இந்திய ஒன்றியத்தைக் காப்பாற்றுவதற்கான வழி என்பதால் அதற்கான செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்துவதற்குப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுத் தங்கள் பணியை மேற்கொள்கின்றனர். இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாகத் திகழ்கிறது தி.மு.க எனும் பேரியக்கம்.

சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7-ஆம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி – மாநில உரிமை – பன்முகத்தன்மை கொண்ட

## உங்களில் ஒருவன்

வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.

தந்தை பெரியாரின் இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சென்று, ஜனநாயக முறையில் அவற்றை நடைமுறைப் படுத்தத் தனி இயக்கம் கண்டவர் பேரறிஞர் அண்ணா. அந்த இலட்சியங்களை நிறைவேற்ற அண்ணாவுக்குத் துணையாகவும், அண்ணாவுக்குப் பிறகு கழகத்தின் தலைவராகவும் இருந்து நிறைவேற்றியவர் தலைவர் கலைஞர். அவர்களின் தொடர்ச்சியாக, உடன்பிறப்புகளாம் உங்களின் பேராதரவுடன் கழகத்தின் பயணம் உங்களில் ஒருவனான என் தலைமையில் தொடர்கிறது.

இலட்சியங்களை நிறைவேற்றும் போது, அவற்றுக்குத் தடையாக – எதிராக நிற்கின்ற கொள்கை எதிரிகளை அடையாளம் கண்டு ஜனநாயகக் களத்தில் வீழ்த்துவதே நம் முன் நிற்கும் முதன்மையான பணி. வெற்றி – தோல்விகளைக் கடந்து இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணிக்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். களத்தில் நாம் பெற்ற விழுப்புண்கள் அதிகம். கொடுத்த விலை இன்னும் அதிகம். ஆனால், எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, ‘நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு’ என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத்தினரின் அடையாளம்.



அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75-ஆவது ஆண்டினை – பவள விழாவினைக் கொண்டாட இருக்கிறது. அதுவும், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில். இதைவிட என்ன மகிழ்ச்சி நமக்கு இருக்க முடியும்?

பெரியார் – அண்ணா – கழகம் பிறந்த செப்டம்பர் மாதத்தில் முப்பெரும் விழாவினைச் சிறப்பாக நடத்தி, கொள்கை முழக்கம் செய்யும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன், கழகத்திற்காகப் பாடுபட்ட இலட்சிய வீரர்களுக்கு விருதுகள் வழங்கி, சிறப்புரை ஆற்றுவது தலைவர் கலைஞர் உருவாக்கிய நடைமுறை – நன்முறை. இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் கழகத்தின் முன்னோடிகளும் தலைவர் கலைஞருக்கு உறுதுணையாக இருந்து முப்பெரும் விழா நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்துவார்கள். இளைஞரணி சார்பில் பெருமைமிகு பேரணிகளை நடத்தியதையும் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறேன்.

**தலைவர் கலைஞரின் வழியில் இந்த ஆண்டும் கழகம் காத்த இலட்சிய வீரர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெரியார் விருது மயிலாடுதுறை திரு.சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருது மீஞ்சூர் திரு.க.சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருது கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் – மாண்புமிகு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் விருது தென்காசி திருமதி. மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருது பெங்களூரு திரு. ந.இராமசாமி அவர்களுக்கும் செப்டம்பர் 17 அன்று தீரமிக்க வேலூர் மாநகரில் நடைபெறவுள்ள கழகத்தின் பவள விழாவுடன் கூடிய முப்பெரும் விழாவில் வழங்கப்படும். கழகத்தின் வளர்ச்சிக்காக சிறப்பாக பாடுபடும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கான விருது களும் முப்பெரும் விழாவில் வழங்கப்பட இருக்கின்றன.**

வீரம் செறிந்த வேலூரின் அடையாளமாக கோட்டை இருப்பதுடன், வேலூர் எப்போதும் தி.மு.கழகத்தின் கோட்டைதான் என்பதைப் பல்வேறு களங்களில் நிரூபித்திருக்கிறது. கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களை நமக்கு வழங்கியுள்ள கோட்டை. தனது மாணவப் பருவத்திலேயே மொழிப் போர்க் களம் கண்டு, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக, அவரின் நிழலாக, கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, கொள்கைத் தடம் மாறாமல் பயணிக்கின்ற பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் வேலூரில் முப்பெரும் திருவிழா – கழகப் பவள விழா நடைபெறுகிறது. விழாவிற்கான பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் நந்தகுமார் அவர்களும் கழக நிர்வாகிகளும் இணைந்து சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

**கலைஞர் நூற்றாண்டு தொடக்கமும், கழகத்தின் பவள விழா தொடக்கமும் இணைந்த இந்த ஆண்டில், வேலூரில் நடைபெறவிருக்கும் முப்பெரும் விழாவிற்கு உடன்பிறப்புகளாம் உங்களை அழைப்பதில் உங்களில் ஒருவனான நான் அகம் மிக மகிழ்கிறேன். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றிக்கு அச்சாரமிடும் வேலூர் முப்பெரும் விழாவுக்கு கொள்கைப் படையாகத் திரண்டு வருக. கழகம் காப்போம் – மொழியைக் காப்போம் – மாநில உரிமை காப்போம் – மக்கள் வாழும் வகையில் நாட்டைக் காப்போம் என்ற உறுதியைத் தருக.**

நாற்பதும் நமதே – நாடும் நமதே என்ற இலக்கை அடைந்திடச் சூளுரைக்கும் விழாவாக வேலூர் முப்பெரும் விழா அமையட்டும். அடுத்த ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவும் – கழகப் பவள விழா நிறைவும் வெற்றிக் கொண்டாட்டங்களாக மலரட்டும்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஆவணி 17,
03.09.2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 04-09-2023

# மும்பையில் முழு வெற்றி!

பாட்னாவில் கருவாகி –

பெங்களூரில் உருவாகி –

மும்பையில் திருவாகி இருக்கிறது ‘இந்தியா’ கூட்டணி. இது பா.ஜ.க.வுக்கும் குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கும் எத்தகைய கலக்கத்தை உருவாக்கி இருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் – சிலிண்டர் விலையை 200 ரூபாய் குறைத்தது ஆகும். இந்தியா கூட்டணிக் கூட்டம் நடக்க நடக்க … சிலிண்டரின் மொத்த விலையே 200 தான் என்கிற அளவுக்கு பிரதமர் குறைத்தாலும் குறைத்துவிடுவார்.

**மும்பை கூட்டமானது முழு வெற்றியாக அமைந்திருப்பதால்தான் அதனை திசை திருப்புவதற்காக – ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ என்ற குழப்பக் கொள்கையை கையில் எடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. இதன் மூலமாக ஒன்று சேர்ந்துள்ள எதிர்க்கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுத்தலாமா என்று பார்க்கிறார் அவர். ‘இந்தியா’ கூட்டணி மிகத் தெளிவாக இருக்கிறது. ‘பா.ஜ.க.வை வீழ்த்துவது ஒன்றே இலக்கு’ என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். அந்த ஒற்றை முழக்கத்தைத் தவிர வேறு எதையும் அவர்கள் கையில் எடுக்கவில்லை.**

இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மும்பைக் கூட்டத்திலேயே தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். **“எதிர்க்கட்சிகள் ஒன்று சேர மாட்டார்கள் என்று நினைத்தது பா.ஜ.க. ஒரே கூட்டத்தில் பிரிந்து விடுவார்கள் என நினைத்தார்கள். கூட்டணியாக இணைந்து – அதற்கு பெயரும் சூட்டி மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்திவிட்டோம் என்பது நமது பக்குவத்தை மட்டுமல்ல நம்முடைய உறுதியையும் காட்டுகிறது.**

**இத்தகைய உறுதியுடன் செயல்பட்டு வரும் அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் – மாநிலக் கட்சியின் தலைவர்கள் – மாநில முதலமைச்சர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிப் பாதையில் நாம் பயணித்து வருகிறோம் என்பதன் அடையாளம் இது” என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே கருத்தைத்தான் அனைத்துத் தலைவர்களும் எதிரொலித்தார்கள்.**

**“இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை” என்றார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆம்! என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது மும்பை கூட்டம்.**

14 உறுப்பினர்கள் கொண்ட ஒருங்கிணைப்பு மற்றும் தேர்தல் வியூகக் குழு அமைக்கப்பட்டு விட்டது. இதேபோல் பிரச்சாரக் குழு, பத்திரிகையாளர்கள் குழு, சமூக ஊடகக் குழு, ஆய்வுக் குழு ஆகிய குழுக்களும் அமைக்கப்பட்டு விட்டன. தொகுதிப் பங்கீடுகளைத் தொடங்கி விடுங்கள் என்றும் ‘இந்தியா’ கூட்டணி அறிவித்துள்ளது.

**“இந்தியா கூட்டணிக் கட்சிகளான நாங்கள் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முடிந்தவரை ஒன்றாகப் போட்டியிட முடிவு செய்திருக்கிறோம். பல்வேறு மாநிலங்களில் தொகுதி பங்கீடு ஏற்பாடுகள் உடனடியாக தொடங்கப்படும்” என்பது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ‘எல்லா இடங்களிலும் பா.ஜ.க.வுக்கு எதிராக இருமுனைப் போட்டியை உருவாக்க முடிவு செய்துள்ளோம்’ என்று சொல்லி இருக்கிறார் உத்தவ் தாக்கரே. மூன்றாவது அணியை உருவாக்க நினைத்தது பா.ஜ.க. அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, இரண்டு அணிகளோடு நிறுத்த வைத்ததுதான் தி.மு.க. தலைவரின் மகத்தான சாதனை ஆகும்.**

பாட்னாவில் 19 கட்சிகளின் அணிச்சேர்க்கையாக இருந்தது. பெங்களூருவில் 26 கட்சிகளின் இணைப்பாக வளர்ந்தது. மும்பையில் 28 கட்சிகளாக வளர்ந்து வருகிறது. இன்னும் பல கட்சிகள் வரலாம். காங்கிரஸையும் உள்ளடக்கிய அணிச்சேர்க்கைதான் வெற்றிகரமாக அமையும் என்பதை தொடர்ந்து சொல்லி வந்தவர் தி.மு.க. தலைவர் அவர்கள்.

**“நாங்கள் எடுத்துள்ள முடிவுகள் பா.ஜ.க.வை வீழ்த்துவதை உறுதி செய்துள்ளது. ஒருங்கிணைப்புக் குழுவை நாங்கள் அமைத்துள்ளது இதனை உறுதி செய்துள்ளது. இந்தியா கூட்டணி நிச்சயமாக பா.ஜ.க.வை வீழ்த்தும்” என்றார் ராகுல் காந்தி. “இந்திய மக்களின் 60 சதவிகிதத்தை நாங்கள் பிரதிபலிக்கிறோம்” என்றும் ராகுல் சொன்னார். “தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படலாம். நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த கூட்டத்தின் நோக்கம் மத்தியில் உள்ளவர்களை வெளியேற்ற வேண்டும் என்பதுதான். நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். வரலாற்றை மாற்றி எழுத பா.ஜ.க.வை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்” என்று திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறார் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார். “நாங்கள் அமைத்திருப்பது சில கட்சிகளின் கூட்டணி அல்ல. புதிய இந்தியாவை உருவாக்க விரும்பும் 140 கோடி மக்களின் கூட்டணி ஆகும்” என்று சொன்னார் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்.**

“நாங்கள் ஒருபோதும் தவறு செய்ய மாட்டோம்” என்று உறுதி அளித்திருக்கிறார் சரத்பவார். நரேந்திர மோடி – அமித்ஷா – நிதின் கட்கரி – யோகி ஆதித்யநாத் – மோகன் பகவத் என பா.ஜ.க.தான் பல கோஷ்டிகளாகக் கலகலத்துப் போயிருக்கிறதே தவிர ‘இந்தியா’ கூட்டணி அல்ல. ‘இந்தியா’ கூட்டணியை வழிநடத்துவது தனி மனிதர்களல்ல, தத்துவங்கள் ஆகும். பா.ஜ.க., மோடி என்ற ஒற்றை முகத்தைக் காட்டி வெற்றி பெற நினைக்கிறது. அந்த முகத்தின் சாயம் வெளுத்துவிட்டது. ஆனால், இந்தியா கூட்டணியானது பல்வேறு தத்துவங்களை முன்னிலைப்படுத்துகிறது. இந்த தத்துவங்கள் வெல்லும் தத்துவங்களாக அமைந்துள்ளன. இவை காலம் காலமாக இந்தியாவைக் காப்பாற்றி வந்த தத்துவங்கள் ஆகும்.

‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெற வைப்பதன் மூலமாக இந்த தத்துவங்களைக் காக்கலாம். இந்த தத்துவங்களை காப்பாற்றுவதன் மூலமாக இந்தியாவைக் காப்பாற்றலாம். இந்த ஒற்றை நோக்கத்தை கூர்மையாக்கியதன் மூலமாக மும்பை கூட்டமானது முழு வெற்றியை ஈட்டித் தந்துள்ளது.

‘கலைஞர் 100’ – கழக மகளிர் அணி சார்பில் செப். 15–ல்

# வினாடி – வினா போட்டிக்குத் தயாராகுங்கள்!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!




**சென்னை, செப்.4–**

**தலைவர்– முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைத்தள வீடியோ பதிவில், “கழக மகளிர் அணி சார்பில் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில் செப்.15 அன்று நடைபெறும். “கலைஞர் 100– வினாடி வினா” போட்டிக்கு அனைவரும் தயாராகுங்கள்” என்று அன்பழைப்பு விடுத்துள்ளார்.**

கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் வீடியோ மூலம் விடுத்த அன்பழைப்பு வருமாறு:–

தமிழ் இனத்தின் அறிவொளியாக, தன்னிகரில்லா ஆளுமையாக வாழ்ந்து வழிகாட்டிய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், திராவிட இயக்கத்தை, தமிழ்நாடு என்னும் பெரும் நிலத்தை, தமிழ் இன வரலாற்றை அனைவரும் அறிந்திடும் வண்ணம், நம் கழக துணைப் பொதுச் செயலாளர் தங்கை கனிமொழி எம்.பி. அவர்களது முன்னெடுப்பில் “கலைஞர் –100” – வினாடி – வினா போட்டி, கழக மகளிர் அணிச் சார்பில் நடைபெறவிருக்கிறது.

நமது முந்தைய களப் போராட்டங்களை, அரசியல் புரட்சிகளை அதற்கு வித்திட்ட நம் முன்னோடிகளை, நம் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் கூறவும் இந்த “வினாடி – வினா” போட்டி பெரும் வாய்ப்பாக அமையும்!

10 ஆயிரம் கேள்விகளோடு 18 வயதுக் குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேலானவர்களுக்கு – என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று சுற்றுகளாக நடைபெறும்.

இந்த வினாடி – வினா போட்டியில் எல்லோரும் கலந்துகொண்டு தங்களின் அறிவுத் திறனை வெளிப்படுத்தலாம்.

www.Kalaignar100.co.in என்ற இணைய தளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15 அன்று இணைய வழிப் போட்டிகள் தொடங்கவிருக்கின்றன!

வரலாற்றின் தனிப்பெரும் மக்கள் இயக்கத்தை இணையில்லா நம் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில் கொண்டாடுவோம்! வாருங்கள்!!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் வீடியோ மூலம் அன்பழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் கழக மகளிரணி சார்பில் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுக்கும் –கலைஞர் 100– வினாடி – வினா போட்டி முயற்சி பாராட்டத்தக்கது.**

**செப்டம்பர் 15–ஆம் நாள் தொடங்கவுள்ள உள்ள – Kalaignar100quiz வினாடி–வினா போட்டிக்கு இப்போதில் இருந்தே தயாராகுங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டில் 4 நாட்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு!

*சென்னை: செப். 4 –*

*தமிழ்நாட்டில் 4 நாட்களுக்கு பரவலாக மழையும், ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவல்: மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, திண்டுக்கல், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்தது.*

*இன்று (செப்.4) தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*செப்.5ம் தேதி, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாட்டத்தின் மலை பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*செப்.6ம் தேதி, தமிழகம், புதுச்சேரி , காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளது..*

# ஆதித்யா எல் 1:

## சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது!

*பெங்களூரு, செப். 4 –*

*பிஎஸ்எல்வி சி57 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலம் நேற்று முன்தினம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது.*

*இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 4ம் தேதி அதன் இலக்கை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.*

*அதாவது, ஆதித்யா எல் 1 விண்கலம் சூரியனை ஆய்வு செய்வதற்கான லாக்ரேஞ்சு புள்ளி இருக்கும் இடத்திற்கு 4 மாத பயணத்திற்கு பின்னரே சென்று சேரும் என்றும் அந்த இடத்தில் இருந்து கிரகணங்கள் அல்லது மறைவுகளால் தடையின்றி தொடர்ந்து சூரியனை கண்காணித்து ஆய்வு பணியில் இந்த விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது.*

*இந்நிலையில், ஆதித்யா எல் 1 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது. அடுத்த சுற்றுவட்டப் பாதைக்கு உயர்த்தும் நடவடிக்கை வரும் 5ம் தேதி மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.*

*ஆதித்யா எல் 1 விண்கலம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.*




## அதிபராகும் நோக்கில் மோடியின் சர்வாதிகாரப் போக்கு!

# ஒரே நாடு - ஒரே தேர்தல் சதித் திட்டம்!

## வடசென்னை ந.மனோகரன் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.9.2023) சென்னையில், கழக தலைமை செயற்குழு உறுப்பினர் மனோகரன் அவர்களின் மகன் மகேஷ்குமார் – ரம்யா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இளையஅருணா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜே.ஜே. எபிநேசர், ஐட்ரீம் ஆர். மூர்த்தி, கே.பி.சங்கர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.

**சென்னை, செப். 4 -**

**அதிபராகும் நோக்கில் செயல்படும் மோடியின் சர்வாதிகாரப் போக்கு தான் ஒரே நாடு – ஒரே தேர்தல் எனும் சதித் திட்டம் என வடசென்னை ந.மனோகரன் இல்ல மணவிழாவில் மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்!**

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.09.2023) காலை, சென்னையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன் இல்லத் திருமண விழாவுக்குத் தலைமையேற்று நடத்தி வைத்து ஆற்றிய உரை வருமாறு:

நம்முடைய தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருமை சகோதரர் மனோகரன் அவர்களது இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில், அதிலும் இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

**சகோதரர் மனோகரன் இல்ல விழாக்களில் பங்கேற்பது மகிழ்ச்சி!**

இன்றைக்கு நடைபெறும் இந்த திருமணத்திற்கு நான் தலைமையேற்று வாழ்த்த வந்திருக்கிறேன் என்று சொன்னால், ஏதோ மனோகரன் இல்லத்தில் நடைபெறும் முதல் திருமணம் மட்டுமல்ல இது, ஏற்கனவே இரண்டு திருமணங்களை, அவரே இங்கே சொன்னது போல நடத்தி வைத்திருக்கிறேன்.

அவருடைய மகளுக்கு 2017-ஆம் ஆண்டு நடைபெற்ற திருமணத்தை நான்தான் நடத்தி வைத்தேன். அதற்கு பின்பு 2018-ஆம் ஆண்டு அவருடைய மகனுக்கு நடைபெற்ற திருமணத்தையும் நான்தான் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். இன்றைக்கு அவருடைய மகனுக்கு நடைபெறும் திருமணத்தையும் நான்தான் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். இன்னும் ஏதாவது மகன்கள், மகள்கள் இருந்தாலும் அதற்கும் நான்தான் வருவேன். நல்லவேளை மகன்கள், மகள்கள் இல்லை. பேரன்கள்தான் இருக்கிறார்கள். நிச்சயம் உறுதியாக அந்தப் பேரன்களுக்கும் நான்தான் திருமணத்தை நடத்தி வைப்பேன். எனவே உங்களோடு சேர்ந்து மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை நானும் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய பொருளாளர் டி.ஆர். பாலு அவர்கள் சொன்னதுபோல, அவருடைய தந்தை மெட்டல் பாக்ஸ் நடராஜன் அவர்கள், இந்த வட்டாரத்தில் – இந்தப் பகுதியில் – இந்த மாவட்டத்தில் கழகத்தின் தளபதியாக விளங்கியவர். மெட்டல் பாக்ஸ் நடராஜனை இந்தப் பகுதியில் இருப்பவர்கள்,

## சி.ஏ.ஜி. அறிக்கைக்கு இதுவரை பிரதமர் மோடி பதிலளிக்காதது ஏன்?

கட்சிக்காரர்கள், கட்சிக்காரர்கள் மட்டுமல்ல எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், கட்சியைத் தாண்டி இருப்பவர்களாக இருந்தாலும் அவரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். எனவே அந்த அளவிற்கு ஒரு சிறப்பான பெயரை பெற்றவராக – மக்கள் தொண்டாற்றுபவராக கட்சிக்கு தொண்டாற்றுபவராக விளங்கியவர்.

**அண்ணா காலத்திலிருந்து கழகத்திற்கு பாடுபட்ட மெட்டல் பாக்ஸ் நடராஜன்!**

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய காலத்தில் இருந்து மெட்டல் பாக்ஸ் நடராஜன் அவர்கள் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பல்வேறு பொறுப்புகளில் இருந்து அவர் பணியாற்றி இருக்கிறார்.

அதைத் தொடர்ந்து அவரைப் போலவே அவருடைய மகன் மனோகரன் அவர்கள் 1984-இல் இளைஞர் அணியில் வட்ட அமைப்பாளராக பொறுப்பேற்று அவர் பணியாற்றி இருக்கிறார். அதற்கு பின்பு 172-ஆவது வட்டமாக இருந்த வட்டக் கிளையில் அவைத் தலைவராக இருந்தும் பணியாற்றி இருக்கிறார்.

இடையில்தான் கொஞ்சம் அவரைக் காணவில்லை. பாலு சொன்னதுபோன்று காணாமல் போய்விடவில்லை. ஒதுங்கி இருந்தார். ஏதோ தனிப்பட்ட காரணமோ அல்லது சூழல் காரணமோ – ஏதோ நிலையில் ஒதுங்கி இருந்தாலும், ஆனால் உடனடியாக நம்மிடத்தில் வந்து விட்டார்.

நான் இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன், அவர் எப்படி நம்மைவிட்டு கொஞ்ச நாள் ஒதுங்கி இருந்தாலும் அதன்பின் நம்மிடம் வந்து எப்படி சேர்ந்தார் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்கிறபோது, 2013-ஆம் ஆண்டு இங்கு நம்முடைய கழகத்தில் இருக்கும் ஒரு முன்னோடி மறைவெய்திய செய்தியை கேட்டு அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக நான் வந்திருந்தேன். நான் நடந்து வந்தபோது அவர் கடை வழியாகப் போகிறபோது, அவர் கடையில் உட்கார்ந்து இருக்கிறார். “என்ன மனோகரன் நன்றாக இருக்கிறீர்களா?” என்று கேட்டு நான் உள்ளே சென்று விட்டேன். அன்றைக்கே தி.மு.க.வில் வந்து உடனே சேர்ந்து விட்டார். அதைத்தான் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

> **‘இந்தியா’ என்று சொன்னாலே இன்றைக்கு நிறைய பேருக்கு பயம் ஆகிவிட்டது. அதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா என்ற பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள்.**

**சுற்றுப்பயணங்களில் எனக்கு பாதுகாவலராக வந்த மனோகரன்!**

அது மட்டும் அல்ல, தொடக்க காலத்தில் இளைஞரணி தொடங்கிய நேரத்தில் நான் எங்காவது சுற்றுப்பயணம் செய்கிறேன் என்று சொன்னால் சென்னையில் மட்டுமல்ல, வெளியூருக்கு எங்காவது செல்கிறேன் என்று சொன்னால் எனக்குப் பாதுகாவலராக வந்தவர்தான் நம்முடைய மனோகரன் அவர்கள். எப்படி அன்றைக்கு பாதுகாவலராக இருந்து எனக்கு அந்தப் பணியை தொடங்கினாரோ, இன்றைக்கும் எனக்கு மட்டுமல்ல, கழகத்துக்கும் பாதுகாவலராக இருந்து தன்னுடைய கடமையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எனவே அவருடைய இல்லத்தில் அவருடைய மகனுக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டதிட்டக் குழு உறுப்பினராக, அதற்குப் பின்னால் செயற்குழு உறுப்பினராக இருந்து தன்னுடைய கடமையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

**யார் காலிலும் விழுந்து, தவழாமல் செயல்படும் கொள்கைக் குடும்பம்!**

அவர் மட்டுமல்ல, அவருடைய மகன் – மணமகனாக வீற்றிருக்கும் மகேஷ் குமார் அவர்களும் இன்றைக்கு மாணவரணியில் மாவட்டத் துணை அமைப்பாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இதைப் பார்த்தவுடனே கழகமே குடும்பம், வாரிசு... வாரிசு என்று பேசுவார்கள். கழகம்தான் குடும்பம், குடும்பம்தான் கழகம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் கொள்கைக் குடும்பமாக இருக்கிறோமா இல்லையா என்பதுதான் முக்கியம். யார் காலிலும் பாதத்திலும் விழுந்து வளர்ந்த குடும்பம் அல்ல இது. தவழ்ந்து சென்று வளர்ந்த குடும்பம் அல்ல இது. இலட்சியக் குடும்பமாக, ஒரு கொள்கைக் குடும்பமாக, மெட்டல் பாக்ஸ் நடராஜனில் இருந்து– மனோகரனில் இருந்து – இன்றைக்கு அவருடைய மகனாக இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்முடைய இயக்கத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் அண்ணா அவர்கள் உருவாக்கிய இயக்கம், அண்ணா அவர்கள் ஒரு குடும்பப் பாச உணர்வோடு இந்த இயக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இது சிலருக்கு இன்றைக்கு வயிற்

## பா.ஜ.க.வின் திட்டத்தை ஆதரித்து பலிகடா ஆகப்போகும் அ.தி.மு.க.!

றெரிச்சலாக இருக்கிறது. அதில் என்னென்ன பேசுகிறார் என்பதை எல்லாம் நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. அதைப்பற்றி நாம் கவலையும் படவில்லை.

**இந்தியாவை காப்பாற்ற வேண்டிய அவசியம் இன்றைக்கு இருக்கிறது!**

இன்றைக்கு நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் நிலையை நீங்கள் எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். எவ்வாறு சட்டமன்றத்தில் தேர்தல் நடந்தபோது தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடு நீங்கள் எல்லாம் ஒரு சிறப்பான வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு – நம்முடைய கூட்டணிக்கு ஏற்படுத்திக் கொடுத்தீர்களோ, அதே போல் இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நான் பலமுறை சொல்லி இருக்கிறேன், யார் பிரதமராக வரவேண்டும்? யார் ஆட்சிக்கு வரவேண்டும்? என்பதல்ல; யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான் நம்முடைய இலட்சியமாக – நோக்கமாக இருக்க வேண்டும்.

எனவே இந்தியா என்று சொன்னாலே இன்றைக்கு நிறைய பேருக்கு பயம் ஆகிவிட்டது. அதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா என்ற பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள்.

## தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ இல்லையோ - கொள்ளையடிப்பதை நிறுத்துங்கள்!

**‘இந்தியா’ கூட்டணியின் பெயரைக்கண்டு அஞ்சி நடுங்கும் பா.ஜ.க.!**

**இந்தியா கூட்டணி அமைத்து முதன் முதலில் பீகார் மாநிலத்தில் நிதீஷ் குமார் அவர்கள், பா.ஜ.க. ஆட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவில் இருக்கும் எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்று திரட்டி பாட்னாவில் ஒரு கூட்டத்தை நடத்தி, அதில் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்று உறுதி எடுத்தோம். அதற்கு பின்னால் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் மீண்டும் இரண்டாவது முறையாகக் கூடி இந்தக் கூட்டணிக்கு ‘இந்தியா‘ என்ற பெயரைத் தேர்ந்தெடுத்து, அதை அறிவித்து, அதற்குப் பிறகு மராட்டிய மாநிலம் மும்பையில் மூன்றாவது கூட்டத்தை நடத்தி, நம்முடைய கூட்டங்கள் எப்படி செயல்பட வேண்டும், அப்படி செயல்படுவதற்கு என்னென்ன அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும், தேர்தல் களத்தில் நாம் எப்படி ஈடுபட வேண்டும், பிரச்சாரத்தை எப்படி நடத்த வேண்டும், எப்படி எல்லாம் நம்முடைய பணி அமைந்திட வேண்டும் என்பதற்காக அதற்கென்று சில குழுக்கள் எல்லாம்கூட அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம்.**

**அவசரமாக நாடாளுமன்றக் கூட்டத்தை கூட்ட வேண்டிய அவசியம் என்ன?**

எனவே இதையெல்லாம் பார்த்து அஞ்சி, நடுங்கி இன்றைக்கு பா.ஜ.க. என்ன செய்திருக்கிறது என்று சொன்னால் திடீரென்று நாடாளுமன்றத்தைக் கூட்டப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் இன்றைக்கு எதற்காக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்‘ என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக சில முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது.

**அந்த ஒரே நாடு – ஒரே தேர்தலை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கு யார் தலைவர் என்றால், இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி. இந்திய நாட்டின் முதல் குடிமகன் என்று சொல்கிறோம் அல்லவா, அந்த ஜனாதிபதி பொறுப்பில் இருந்தவரைத் தலைவராக போட்டிருக்கிறார்கள். இந்திய நாட்டின் ஜனாதிபதி என்பவர் ஒரு பொதுவானவர். அவர் பதவியில் இருந்து விலகினாலும், அவர் அரசியலுக்கு வரக்கூடாது அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையிலும் தலையிடுவது அவருக்கு நியாயம் கிடையாது. அதுதான் மரபு. அவர் ஒரு பொதுவானவராக மாறிவிடுகிறார்.**

**ஒரே நாடு – ஒரே தேர்தல் முயற்சிக்கு தலையாட்டி பொம்மைகளைக் கொண்ட குழு!**

**ஆனால் அதை எல்லாம் இன்றைக்குக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி அதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல், இவர்கள் சொல்வதை அவர் கேட்பார் என்பதற்காக அவரைப் போட்டு, அதற்குப் பிறகு அதில் சில உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். அந்த உறுப்பினர்களிலாவது எல்லா கட்சியும் கலந்து, கேட்டு போட்டார்களா என்றால், அதுவும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. தி.மு.க.வின் பிரதிநிதிகள் இருக்கிறார்களா என்றால் கிடையாது.**

**எனவே தலையாட்டி பொம்மைகளாக இருக்க வேண்டும் என்பதற்காக சில பேரை போட்டு, அவர்கள் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்பதற்காக ஒரு சர்வாதிகாரத்தோடு அந்த கமிட்டியை நியமித்து ஒரு சதித் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.**

அதை இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் எதிர்க்கட்சி அ.தி.மு.க.,– ஆளுங்கட்சியாக இருந்தபோது அந்தக் கொள்கையை எதிர்த்தார்கள். இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறபோது, அதே அ.தி.மு.க. அதை ஆதரிக்கிறது. இதை ஆதரிக்கிறதை பார்க்கிறபோது என்ன நினைக்கிறோம் என்றால், ஆட்டுத் தலையை வெட்டுவார்கள் அல்லவா, அதற்கு என்ன சொல்வார்கள்? ஆம், பலிகடா செய்வார்கள் அல்லவா, அந்த மாதிரிதான். தாம் பலிகடா ஆகப்போகிறது என்று ஆட்டுக்கு தெரியாது. அதனால் அ.தி.மு.க. பலிகடா ஆகப்போகிறது. இந்த சட்டம் நிறைவேறினால், தி.மு.க. மட்டுமல்ல, எந்த அரசியல் கட்சியும் நாட்டில் செயல்பட முடியாது. எனவே ‘One Man Show’ ஆகிவிடும். ஒரே நாடு – ஒரே தலைவர், ‘அதிபர்’ என்று அவரே அறிவித்து விடலாம். எனவே தேர்தலே கிடையாது. ஒரே நேரத்தில் ஒரே தேர்தல்தான் வைக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

**ஒரே நேரத்தில் தேர்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமானதா?**

நான் கேட்கிறேன், கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். 2021-இல் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்து, நாம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடம் ஆகிறது. இன்னும் இரண்டரை வருடம் இருக்கிறது. எனவே நாடாளுமன்றத் தேர்தல் வருகிறபோது, ஒரே தேர்தல் நடத்த வேண்டும் என்றால் இந்த ஆட்சியைக் கலைத்து விடுவீர்களா? நாம் மட்டுமா, பக்கத்தில் இருக்கும் கேரள மாநிலம். அதேபோல மேற்குவங்கம். அங்கெல்லாம் கலைத்துவிடுவீர்களா? அவர்களுக்கெல்லாம் இன்னும் இரண்டரை வருடத்திற்கு மேல் ஆட்சி இருக்கிறது. ஏன் சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற கர்நாடக மாநிலம். அங்கு 40 சதவீதம் ஊழல் என்ற ஒரு சிறப்புப் பெயர் எடுத்து, பா.ஜ.க., படு தோல்வி அடைந்து, அங்கு காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்திருக்கிறது. எனவே அந்த ஆட்சியைக் கலைத்து விடுவீர்களா?

**சரி, அதுதான் போகட்டும். ஒரே நேரத்தில் தேர்தல் வைக்கிறீர்கள். அப்படி நாடாளுமன்றத்தோடு சட்டமன்றங்களுக்கும் தேர்தல் வைத்து, எங்காவது ஒரு மாநிலத்தில் மெஜாரிட்டி வராமல் போய்விட்டது என்றால், ஆட்சியை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் அப்போது என்ன செய்வீர்கள்? மறுபடியும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரும்வரை அந்தத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி ஆட்சி நடத்தப் போகிறீர்களா? எனவே இப்படி ஒரு அசிங்கமான, கேவலமான ஒரு சதித் திட்டத்தைத் தீட்டி, எனவே ஒரு அதிபராகத் தான் இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அந்த முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர நாட்டைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.**

**தேர்தல் செலவை மிச்சப்படுத்த வேண்டும், குறைக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ, இல்லையோ நீங்கள் கொள்ளை அடிப்பதை முதலில் குறையுங்கள். சி.ஏ.ஜி. ரிப்போர்ட் என்ன கொடுத்திருக்கிறது? ரூ.7.5 லட்சம் கோடி!**

**இந்தியாவைக் காப்பாற்ற நாம் தயாராக வேண்டும்!**

நெடுஞ்சாலை போட்டதில், அதே நேரத்தில் டோல்கேட் வசூலில் – இப்படி பல நிலைகளில் கோடி கோடியாகக் கொள்ளை அடித்து, அதுவும் ஆதாரங்களோடு சி.ஏ.ஜி. அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதைப் பற்றி கவலைப்படாமல், அதற்கு இதுவரை பதில் சொல்ல முடியாத நிலையில் ஒரு பிரதமர் இருக்கிறார் என்று சொன்னால், இப்படிப்பட்ட இந்த கொடுமையான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தத் திருமண விழாவில், இது கழகக் குடும்பத்தில் நடைபெறும் திருமணம், நம்முடைய வீட்டு திருமணம். எனவே இந்தக் குடும்பத் திருமணத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழியும், சபதமும் – ‘இந்தியாவைக் காப்பாற்ற நாம் இன்றைக்குத் தயாராக இருக்க வேண்டும்‘ என்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் நான் அன்போடு கேட்டுக் கொண்டு, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், ‘வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்‘ இருந்து வாழுங்கள்... வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தி.மு.க தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக்கான கோப்பையும், பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் வழங்கி பாராட்டினர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா: திருச்சி தெற்கு மாவட்ட

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கைப்பந்துப் போட்டி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - அன்பில் மகேஷ் பொய்யாமொழி - நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பரிசுகள் வழங்கினர்!

திருச்சி, செப்.4-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தி.மு.க தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது.

லீக் முறையில் நடத்தப்பட்ட இப்போட்டியில், ஆண்கள் பிரிவில் ஜமால் முஹம்மது கல்லூரி அணி முதலிடமும், தமிழ்நாடு காவல் துறை அணி

2வது இடத்தையும் பிடித்தது. அதே போல பெண்கள் பிரிவில் தமிழ்நாடு காவல் துறை அணி முதலிடமும், ஜமால் முகமது கல்லூரி அணி 2வது இடத்தையும்,

வெற்றிபெற்ற இந்த அணிகளுக்கு வெற்றிக்கான கோப்பையும், பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் வழங்கி பாராட்டினர்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த தயாநிதிமாறன் எம்.பி. குறிப்பிட்டதாவது:

அவசர கதியில் பாராளுமன்றத்தை கூட்டுகிறார்கள். ஆகஸ்ட் மாதத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற கூட்டத்தொடரில் பிரதமர் மோடி கலந்து கொள்ளவே இல்லை. மணிப்பூர் விவகாரம் குறித்து பேச மறுக்கிறார். வெளி நாடுகளுக்கு செல்லும் பிரதமர் இதுவரை மணிப்பூருக்கு செல்லவில்லை.

பாராளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டும் போது எதற்காக அது கூட்டப்படுகிறது என்பதை தெரிவிக்க வேண்டும் ஆனால் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. சிறப்பு கூட்டத்தொடரில் கேள்வி நேரம் கிடையாது என்கிறார்கள் அதுவும் ஏன் என தெரியவில்லை.

ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்ய குழு அமைத்துள்ளார்கள். அந்த குழுவில் தென்னிந்தியாவை சேர்ந்த எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இல்லை. அதே போல தேர்தல் ஆணையத்தை சேர்ந்த அதிகாரிகள் யாரும் இல்லை. முதல் முறையாக பதவியிலிருந்து சென்ற குடியரசு தலைவரை ஒரு குழுவின் தலைவராக நியமித்துள்ளார்கள் அதுவும் ஏன் என தெரியவில்லை.

கோமாளியை ரசிக்கலாம் ஆனால் கோமாளி கையில் ஆட்சியை கொடுத்தால் மன்றமே சர்க்கஸ் கூடாரமாக மாறிவிடும் என்பதற்கு தற்போது நடப்பதே உதாரணம். மோடியின் கூட்டணியில் சி.பி.ஐ, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை தான் இருக்கிறார்கள். ஆனால் இந்தியா கூட்டணி மக்கள் கூட்டணி.

நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல் ஆகிய மூன்றிலும் தோல்வி அடைந்ததால் கஷ்டமாக இருக்கிறது என ஒரே முறை தோல்வி அடைந்து விடலாம் என்பதற்காக தான் ஒரே நாடு, ஒரே தேர்தலை அ.தி.மு.க தற்போது ஆதரிக்கிறது என உதயநிதி தெரிவித்துள்ளார். அதையே நானும் தெரிவிக்கிறேன்.

சி.ஏ.ஜி ஊழல் மிகப்பெரிய ஊழல் அதை மூடி மறைக்க பார்க்கிறார்கள். அதே போல அதானி பிரச்சனை இது போன்ற பிரச்சனைகளை திசை திருப்ப அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். நாட்டில் முக்கிய பிரச்சனை இருக்கும் போது மக்களை அதிலிருந்து திசை திருப்பி தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கி அவர்களின் தவறை மறைப்பது தான் மோடியின் வேலை.

2024 ல் இந்தியா கூட்டணி வெற்றி பெற்ற உடன் நீட்டிற்கு விதி விலக்கை கொண்டு வருவோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மாவட்ட மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர்கள்டால்பின் ஏ.ஜெ. சாலமன், கே.லோகநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட மாநகர நிர்வாகிகள் கே.கௌதம், பஷீர்அகமத், எம்.நாகராஜன், எஸ்.ரவீந்தரநாத், எம்.ஆர்.மதன், சிவா நாகராஜன், ஜி.பிரபு, கே.ஹரிஹரன், எம்.ராஜராஜன், பிச்சையப்பன், அன்பில் கோவிந்தராஜ் மற்றும் திரளானோர் கலந்து கொண்டனர்.

### 91வது வட்டக் கழகச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன் மகள்

# ஏ.அஜிதா தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சில் வழக்கறிஞராக பதிவு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ.-ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ.-ப.ரங்கநாதன்-நொளம்பூர் வே.ராஜன் வாழ்த்து!

சென்னை,செப்.4-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்குபகுதி 91,வது வட்ட கழக செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசனின் மகள் ஏ.அஜிதா 01.09.2023 அன்று தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததை முன்னிட்டு நடைபெற்ற வாழ்த்து விழாவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரிய தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி 11 மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே. ராஜன், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

இந்கழ்ச்சியில் 7,வது மண்டலகுழு தலைவர் பி.கே.மூர்த்தி மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், ஆ.மாலினிஎம்சி,தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ் எம்.உதயகுமார், மாவட்ட அமைப்பாளர்கள், கே.குமரேசன் லயன் எஸ்.மணி வட்டகழக செயலாளர்கள், எஸ்.ஜி.மாதவன் ப.ஆலன் எம்.எம்.ஜெயரத்தினம் சி.சசிகுமார் எம்.இ.ஸ்டாலின் எம். மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.சேகர், கே.வி.திலகர், கமல், ரமணி மாதவன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர். ரசூல்தீன் ஆர்.ராக்கேஷ் ஆர்.கர்ணல் க. பிருந்தாவணன், எம்.சி.எழிலரசு, கே.ராஜ்குமார், ஏ. முரளி, பி.சங்கர், ஜி.குப்புசாமி, எம்.ஆர்.சதீஷ். மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், எம்.கே.அரிதாஸ், கே. விவேக்குமார், மின்னி ஜான், மீசை என்.செல்வராஜ், வி.செல்வகுமார், ஜஷ்வந்த்நகர் டில்லிராஜா, டி. கன்னியப்பன், பகுதிகழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அமுதா ராமச்சந்திரன், எம்.எம்.சசிகுமார், ஆர்.ஜெய்சங்கர், ஆர்.நாகராஜன் மா.பழனிவேல், 91,வது வட்ட கழக நிர்வாகிகள், டி.தாமோதரன், பி.ராஜேந்திரன் எம்.செல்வகுமார், எஸ்.கஜலட்சுமி, ஏ.அப்பாசாமி, எம்.கோபி, ஆர். ஆனந்தஜோதி, ஜே.சௌரி, கே.சண்முகம், கோ.மணி, எஸ்.சண்முகம், கே. கே.முனீஸ்வரன், அகார்த்திக், என். வடிவேல், பி.முத்துக்குமார், பி.சுரேஷ், வி.ஐசக், பி.ராமானுஜம், பி.அகஸ்டின், எஸ்.வி.செந்தில்குமார், ஆர்.ராம்குமார், பி.தயாநிதி, எம்.கே.பி. ஜெய சீலன் பி.மோகனகிருஷ்ணன், டி.சங்கர், ஜே.ரூபன் ஐசக், 91, வட்ட மகளிரணி, ஏ.செண்பகம், ஜி.வசந்தி, எஸ்.பியுலா, எம். ராஜலட்சுமி, டி.ருக்மிணி, பி.அறிவுக்கண்ணு, கே.கஸ்தூரி, ஒய்.சுமதி, ஏ.உமா, எஸ்.ஜானகி. 91,வட்ட இளைஞரணி, பி.அப்பு (எ) மணிவண்ணன், வி.யோகேஷ்வரன், எஸ். மணிகண்டன், வி.கௌசிக், மற்றும் மாவட்ட, பகுதி,வட்டகழக, நிர்வாகிகள், கழக உறுப்பினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் திம்மராஜம்பேட்டை ஊராட்சியில் இல்லம் தேடி இளைஞரணி சேர்த்தல் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ. யுவராஜ் தலைமையில் ஒன்றிய துணை அமைப்பாளர் வி. குமரன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம் எல் ஏ துவக்கி வைத்தார் உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ப. அப்துல் மாலிக் ஒன்றிய செயலாளர் பி சேகர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர் கே தேவேந்திரன் பேரூர் செயலாளர் என் பாண்டியன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. சஞ்சய் காந்தி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்குபகுதி 91,வது வட்டகழக செயலாளர் எம்.கே.பி.அண்ணாதாசனின் மகள் வழக்கறிஞர் அ.அஜிதா கடந்த 01.09.2023அன்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததையொட்டி சென்னை தெற்கு மாவட்டகழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியனை குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### ஆத்தூர் - கோனூர் ஊராட்சியில்

# சங்கான்குளத்தை சொந்தச் செலவில் தூர்வாரும் பணி!

## அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு!

ஆத்தூர் , செப்.4-

கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள், கிராம மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, குட்டத்துப்பட்டி ஊராட்சி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பயன் பெறுகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் சங்கான்குளம் உள்ளது சுமார் 41ஏக்கர் (16.43ஹெக்டேர்) நிலப்பரப்புள்ள இந்த குளத்தை தூர்வாரி கொடுக்க வேண்டுமென்று ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளதாய் தங்கபாண்டியன் தலைமையில் விவசாயிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்ற உடனே தனது சொந்த செலவில் சங்கான் குளத்தை தூர்வாரி கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி சங்கான்குளத்தில் தூர்வாரும் பணி கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வருகிறது. கோனூர், கரிசல் பட்டி ஊராட்சி, கசவனம் பட்டி, தருமத்துப்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, குட்டத்துப் பட்டி ஊராட்சி கிராமங்களை சேர்ந்த குயவநாயக்கன்பட்டி, மேலதிப்பம் பட்டி, கீழதிப்பம்பட்டி, அலவாச்சிபட்டி, மைலாப்பூர், குட்டத்து ஆவாரம்பட்டி, போடம்பட்டி, பழைய கன்னிவாடி, வட்டப்பாறை, காரமடை, உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் டிராக்டர் மூலம் சங்கான்குளத்திற்கு வந்து இலவசமாக வண்டல் மண்ணை எடுத்து சென்று தங்களுடைய விளை நிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சுமார் 40க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த நூற்றுக் கணக்கான விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். இதுகுறித்து கோனூர் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளத்தாய் தங்கபாண்டியன் கூறுகையில் ரெட்டியார் சத்திர ஒன்றிய பகுதி விவசாயிகளின் பாதுகாவலராக இருக்கும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எங்கள் பகுதி விவசாயிகளின் நலன் கருதி தனது சொந்த செலவில் சுமார் 30 லட்சம் மதிப்பில் சங்கான் குளத்தை தூர்வார உத்தரவிட்டதால் இன்று விவசாயிகள் இலவசமாக வண்டல் மண்ணை எடுத்து வருகிறார்கள். ஊராட்சி நிர்வாகம் சார்பாக நாங்கள் முறையாக வரிசை முறைப்படி விவசாயிகள் குளத்து வண்டல் மண்ணை எடுத்து செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கொட்டும் மழையிலும் விவசாயிகள் வண்டல் மண்ணை எடுத்து செல்கிறார்கள் என்றார்.

### ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்டம்!

# 99 சதவிகித உறுப்பினர்கள் ஒன்றிய அரசுக்கு ஆதரவானவர்கள்!

## ஆய்வுக்குழுவின் முடிவு எப்படி? சமூக ஆர்வலர்கள் கருத்து!

புதுடெல்லி, செப்.4-

ஒரேநாடு, ஒரே தேர்தல் திட்டம் தொடர்பான ஆய்வுக் குழுவில் இடம் பெற்றுள்ள 99சதவீத உறுப்பினர்களும், ஒரே தேர்தல் திட்டத்துக்கு ஆதரவானவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் ஆய்வுக்குழுவின் முடிவு எப்படி இருக்கும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தல் முதல் உள்ளாட்சி தேர்தல் வரை, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு அமைத்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. அதில், இரண்டாவதாக இடம் பெற்றுள்ளவர் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆவார். காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி பா.ஜ.க.வுக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவித்து வரும் குலாம் நபி ஆசாத்தும் குழுவில் இடம் பெற்றுள்ளார். இவர் ஒரே தேர்தலுக்கு ஆதரவான கருத்துகளை ஏற்கனவே தெரிவித்து வருகிறார். மேலும், உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, வாஜ்பாய் ஆட்சியின் போது சொலிசிட்டராக இருந்தவர். காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட 370 சிறப்பு அதிகாரம் நீக்கம், டெல்லி அதிகார பறிப்பு வழக்குகளில் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக தற்போது வாதிட்டு வருகிறார்.

இதேபோன்று, முன்னாள் மக்களவை செயலாளரான சுபாஷ் காஷ்யாப், பா.ஜ.க.வின் நுபுர் சர்மா நடத்திய விவாதத்தில் கலந்து கொண்டு ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஆதரவான கருத்தை வெளியிட்டுள்ளார். மற்றொரு உறுப்பினரான ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி என்.கே. சிங் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, பின்னர் 2014 ஆம் ஆண்டில் பா.ஜ.க.வில் இணைந்தவர். அதன் பின்னர் 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 15வது நிதிக்குழுவின் தலைவராக இருந்தவர் ஆவர். ஹரியானாவைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய கண்காணிப்பு ஆணையர் சஞ்சய் கோத்தாரி முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்தின் செயலாளரகவும் பணியாற்றியுள்ளார். இந்த குழுவில் இடம் பெற்றுள்ள அனைவருமே பா.ஜ.க.வின் ஒரே தேர்தல் திட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்று கூறப்படுகிறது. குழுவில் இடம் பெற்ற ஒரே எதிர்கட்சி உறுப்பினர் ஆதிரஞ்சன் சௌத்ரி ஒரே தேர்தல் குறித்த ஆய்வு என்பதே கண்துடைப்பு என்று கூறி குழுவிலிருந்து வெளியேறுவதாக அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக

# பிரதிநிதி எஸ்.மாறன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப். 4 -

சென்னை தென்மேற்கு மாவட்ட கழகப் பிரதிநிதி எஸ்.மாறன் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மயிலை 126 வது வட்டம் வன்னியம்பதி தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியீருப்பில் வசிக்கும் எஸ். மாறன் 38ஆண்டு காலம் கழகப் பணியாற்றியவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர், பல பொறுப்புகளை வகித்த இவர் தற்போது சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகிக்கின்றார். இவர் தமிழ்நாடு நகர்புற வாழ விட மேம்பாட்டு வாரிய வன்னியம்பதி குடியிருப்பின் பொது நல சங்க



ஊர் தலைவராகவும் பொறுப்பு வகித்து ஊர் பொது மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அவர் நேற்று (03.09.2023 ) அதிகாலை 3 மணியளவில் இயற்கை எய்தினார்.

அவரது இறுதி ஊர்வலம் இன்று (4.09.2023) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து தொடங்கி மயிலாப்பூர் இடுகாட்டில் நல்லடக்கம் செப்படுகிறது என்பத தெரிவித்துக் கொள்கிறோம்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிக்கை.!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி ஆலோசனை கூட்டம் நாளை 05.09.2023 மாலை 4:00 மணிக்கு, ஆவடி, திருமலைராஜபுரதில் அமைந்துள்ள கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

மேலும் இக்கூட்டத்தில் ஆ.கிருஷ்ணாசாமி எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், திருமதி. காயத்ரி ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள்த .எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். இக்கூட்டத்தில் முன்னதாக மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் வரவேற்புரை ஆற்றுகிறார். இதில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள். கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

மாவட்ட வழகறிஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் .

வழக்கறிஞர் அணிக்கு புதிய உறுபினர்கள் சேர்த்தல், புதுப்பித்தல்

2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள் கழக ஆக்கப் பணிகள் குறித்து.

குறிப்பு: உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிக்காக வழக்கறிஞர்கள் தவறாது தங்களது Bar Council ID, Enrollment Certificate Xerox மற்றும் Passport Size Photo எடுத்துவரவும்.

**ஆவடி சா.மு.நாசர்**

செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



கலைஞர் 100
1924 - 2023
04.09.2023 திங்கட்கிழமை
ஒருங்கிணைந்த
தூத்துக்குடி மாவட்ட தி.மு.க
இளைஞரணி
செயல் வீரர்கள் கூட்டம் மற்றும்
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்குதல் மற்றும்
மாவட்ட ஆட்சியரகத்தில்
பல்வேறு துறைகள் தொடர்பான
ஆய்வுக்கூட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!
அன்புடன் வரவேற்று மகிழும்: பி.கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் - மகளிர் உரிமை துறை அமைச்சர் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க


நாள் : 04.09.2023
தூத்துக்குடி மாவட்டத்தில்
அரசுத் துறை திட்டங்களை ஆய்வு செய்வதற்கும்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி
மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில்
பங்கேற்க வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
ARASU ARTS
உதயநிதிஸ்டாலின்
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்


தூத்துக்குடி மாவட்டத்தில்
அரசுத் துறை திட்டங்களை ஆய்வு செய்வதற்கும்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி
மாவட்ட இளைஞர் அணி
செயல் வீரர்கள் கூட்டத்தில்
பங்கேற்க வருகை தரும்
நாள் : 04.09.2023
ARASU ARTS
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
அன்புடன்
S.R.S.உமரிஷங்கர் B.A.,
தி.மு.க. மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர்
அ.பிரம்மசக்தி M.E.,B.L.,
மாவட்ட ஊராட்சித் தலைவர் – தலைமை செயற்குழு உறுப்பினர்







# திருப்பூர் வடக்கு மாவட்ட பாக முகவர்கள் கூட்டம் (BLA-2)

## அவினாசி சட்டமன்ற தொகுதி

08.09.2023 காலை 10.00 மணி
இடம் : ராபா திருமண மண்டபம், அவினாசி

தலைமை : **க.செல்வராஜ்** எம்.எல்.ஏ.,
திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்

வரவேற்புரை : **தொண்டாமுத்தூர் ரவி**
கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர்

ஒன்றிய செயலாளர்கள் **ஈ.ப.சிவப்பிரகாஷ்** - அவினாசி, **எஸ்.ஆர்.பழனிசாமி** - திருமுருகன்பூண்டி, **க.பால்ராஜ்** - சேவூர், **என்.பழனிசாமி** - அன்னூர் வடக்கு, **மு.தனபால்** - பொறுப்பாளர் அன்னூர் தெற்கு,
நகர செயலாளர் **மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி** திருமுருகன்பூண்டி,
பேரூர் கழக செயலாளர்கள் **வ.வசந்தகுமார்** - அவினாசி **இரா.பரமேஸ்வரன்** - அன்னூர்

சிறப்புரை : **ஆ.இராசா** எம்.பி.,
கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்

## திருப்பூர் தெற்கு - திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி

தலைமை : **க.செல்வராஜ்** எம்.எல்.ஏ., (திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்)
வரவேற்புரை : டி.கே.டி. **மு.நாகராசன்** (திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர்) **ந.தினேஷ்குமார்** (மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர்)

| தேதி | நேரம் | பகுதி | நிகழ்விடம் | பகுதி செயலாளர்கள் |
|---|---|---|---|---|
| 05.09.2023 | காலை 09.00 மணி | கருவம்பாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மியாமி அ.அய்யப்பன் |
| 05.09.2023 | மாலை 04.00 மணி | ஆண்டிபாளையம் பகுதி, | மாவட்டக் கழக அலுவலகம் | ப.முருகசாமி |
| 05.09.2023 | மாலை 04.00 மணி | முத்தனம்பாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | எஸ்.என்.குமார் |
| 05.09.2023 | மாலை 04.00 மணி | வீரபாண்டி பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | அ.கோவிந்தராஜ் |
| 06.09.2023 | காலை 09.00 மணி | வாலிபாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மு.க.உசேன் |
| 06.09.2023 | மாலை 04.00 மணி | நல்லூர் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மேங்கோ அ.பழனிசாமி |
| 07.09.2023 | மாலை 04.00 மணி | பாண்டியன் நகர் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | வெ.ஜோதி |
| 08.09.2023 | மாலை 04.00 மணி | கொங்குநகர் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | போலார் ரா.சம்பத்குமார் |
| 09.09.2023 | மாலை 04.00 மணி | அண்ணா காலனி பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மின்னல் அ.நாகராஜ் |
| 10.09.2023 | மாலை 04.00 மணி | வேலம்பாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | கொ.ராமதாஸ் |

## பல்லடம் சட்டமன்ற தொகுதி

தலைமை : **க.செல்வராஜ்** எம்.எல்.ஏ., (திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்) **க.நடராஜன்** (அவைத்தலைவர்) வக்கீல் **எஸ்.குமார்** (துணைச்செயலாளர்) **வெ.ராதாகிருஷ்ணன்** (மாமன்ற உறுப்பினர்)

| தேதி | நேரம் | ஒன்றியம் | நிகழ்விடம் | ஒன்றிய செயலாளர்கள் |
|---|---|---|---|---|
| 05.09.2023 | மாலை 04.00 மணி | பொங்கலூர் மேற்கு | ஆரியாஸ் ஹோட்டல் | பெ.அசோகன் |
| 06.09.2023 | காலை 10.00 மணி | பொங்கலூர் கிழக்கு | உகாயனூர் கழக அலுவலகம் | சா.பாலுசாமி |
| 06.09.2023 | மாலை 04.00 மணி | பல்லடம் கிழக்கு | ஒன்றிய கழக அலுவலகம் | ந.சோமசுந்தரம் |
| 07.09.2023 | காலை 10.00 மணி | பல்லடம் மேற்கு | ஒன்றிய கழக அலுவலகம் | சு.கிருஷ்ணமூர்த்தி |
| 07.09.2023 | மாலை 04.00 மணி | பல்லடம் நகரம் | நகரக் கழக அலுவலகம் | ந.ராஜேந்திரகுமார் |
| 08.09.2023 | மாலை 04.00 மணி | திருப்பூர் தெற்கு | அம்மன் கலையரங்கம் சுல்தான் பேட்டை மங்கலம் | பி.விஸ்வலிங்கசாமி |
| 09.09.2023 | காலை 10.00 மணி | திருப்பூர் வடக்கு | அம்மன் மண்டபம் பெருமாநல்லூர் | என்.விஸ்வநாதன் |

### மாவட்ட கழக நிர்வாகிகள்

**க.நடராசன்** (அவைத்தலைவர்)
வழக்கறிஞர் **சு.குமார்**, டிஜிட்டல் **எஸ்.சேகர்**, வழக்கறிஞர் **சி.கே.நந்தினி** (துணைச்செயலாளர்கள்)
**சு.சாமிநாதன்** (பொருளாளர்)

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் : **சி.கோவிந்தசாமி, எஸ்.சரவணநம்பி, பா.குணராஜ், ப.கு.கனகராஜ்**

பொதுக்குழு உறுப்பினர்கள் : **சலீம் (எ) அ.அப்துல் ரகுமான், எஸ்.எம்.மஸ்ஊது, ப.சண்முகசுந்தரம், செ.உமாமகேஸ்வரி, மு.முகமது ரபி, ஆர்.தங்கவேல், மு.நாச்சிமுத்து**

### தெற்கு மாநகர நிர்வாகிகள்

**ப.கணேசன்** (அவைத்தலைவர்)
**பி.ஆர்.செந்தில்குமார், ப.பாஸ்கரன், க.மகாலட்சுமி** (துணைச்செயலாளர்கள்)
**ஜி.முத்துக்கிருஷ்ணன்** (பொருளாளர்)

மாவட்ட பிரதிநிதிகள் : **ரா.முருகேஷ், ச.ராமகிருஷ்ணன், அ.சுப்பிரமணியம், பி.தங்கராஜ், எஸ்.பழனிசாமி, மு.க.அசேன், மு.முஹம்மது சபி, வி.பி.மகேந்திரன், இரா.தம்பி வடிவேல்**

### வடக்கு மாநகர நிர்வாகிகள்

**க. ஈஸ்வரமூர்த்தி** (அவைத்தலைவர்)
**அ.ராமசாமி, வே.செங்குட்டுவன், மு.தேவி** (துணைச்செயலாளர்கள்)
**அ.சரவணக்குமார்** (பொருளாளர்)

மாவட்ட பிரதிநிதிகள் : **சி.வெள்ளைச்சாமி, மூர்த்தி, அ.ஆறுச்சாமி, ச.மகேந்திரன், செ.முருகன், மா.தாமோதரன், மு.வேலுச்சாமி, சி.பாலசுப்பிரமணி, க.சுப்பிரமணியன்**

அந்தந்த பகுதி நிர்வாகிகள் அவர்கள் பகுதியில் நடைபெறும் பாக முகவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்

## திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொது நூலகத் துறை மற்றும் சென்னை மாநகர நூலக ஆணைக்குழு முயற்சியில் Rotary Club Of Chennai Legends சார்பாக புதுப்பிக்கப்பட்டுள்ள புதுமைப்பித்தன் சிற்றரங்கத்தினை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.சிற்றரங்கம் மட்டுமல்லாமல் சுகாதார வளாகத்தையும் அமைத்துக்கொடுத்த Rotary Club Of Chennai Legends அமைப்பினருக்கு அமைச்சர் எழுத்தாளர்கள், வாசகர்கள் சார்பாக தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு, சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன், பொது நூலகத் துறை இணை இயக்குநர் திருமதி.அமுதவல்லி, ரோட்டரி லெஜன்ட்ஸ் தலைவர் முனைவர் குமார் இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கொல்லிமலை:ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியில்

# சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை!


சேந்தமங்கலம்,ஆக.4-

நாமக்கல் மாவட்டத்தில் சிறந்த சுற்றுலா தலமாக கொல்லிமலை விளங்கி வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமின்றி, அண்டை மாநிலங்களிலிருந்தும் சுற்றுலா வரும் பயணிகள் கொல்லிமலையில் உள்ள ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி, மாசிலா அருவி, நம் அருவி, சந்தன பாறை அருவி, சினி பால்ஸ், படகு இல்லம், தாவரவியல் பூங்கா, சீக்குப்பாறை காட்சி முனையம் ஆகிய பகுதிகளில் குவிந்த வண்ணம் உள்ளனர். கடந்த சில வாரங்களாக, கொல்லிமலையில் மழை பெய்யாததால், அருவிகளில் சொற்ப அளவிலான தண்ணீர் கொட்டி வந்தது. இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக கொல்லிமலையில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், அங்குள்ள அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையின் காரணமாக, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதையடுத்து, சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி குளிப்பதற்கும், சுற்றிப்பார்ப்பதற்கும் வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

மழையின் காரணமாக, வனப்பகுதிகளில் உள்ள காட்டாறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மாசிலா அருவி, நம் அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. மாசிலா அருவியில் பராமரிப்பு பணி நடைபெற்று வருவதால், சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்ப ட்டுள்ளது. கொல்லிமலைக்கு வந்த சுற்றுலா பயணிகள் நம் அருவி, சினி பால்ஸ், சந்தன பாறை அருவிகளில் மட்டும் குளித்து விட்டு சென்றனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** ஏண்ணே; தமிழகத்தில் பா.ஜ.க. மட்டும் 25 தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும்; மொத்தத்தில் தேசிய ஜனநாயக முன்னணி 39 தொகுதிகளையும் கைப்பற்றும் என்றும்; மாநில பா.ஜ.க. தலைவர் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; கனவு காண்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது; ஆனால் அவர் காண்பது பகல் கனவு. ஆசைப் படலாம், ஆனால் பேராசை, பெருநஷ்டத்தில் முடிந்துவிடும். அவர் முட்டாள்களின் சொர்க்கத்தில் ( Fools' Paradise ) இருக்கிறார். அதனால் படுத்துத் தூங்கி எழுந்தும், கொட்டாவி விட்டுக்கொண்டு கொக்கரிக்கிறார் !**

**அவர் அப்படிக் கூறியிருப்பது, இன்று அவர் வழங்கியிருக்கும் 'தாமரை பிராண்ட்' நகைச்சுவை. நாள் தோறும் அவர் வழங்கிவரும் நகைச்சுவை, நமது நாட்டினரை எள்ளி நகையாட வைக்கிறது !**

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில்- இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில்

# சைதை கிழக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா! தெருக்கூத்து நிகழ்ச்சி!

## அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைத்தார்! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, செப். 4 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான மா.சுப்பிரமணியன் முன்னிலையில், 13 வது மண்டல குழு தலைவரும் சைதை கிழக்கு பகுதிச் செயலாளருமான இரா.துரைராஜ் தலைமையில், 2.09.2023 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு, 168வது வட்டம் ஈக்காட்டுத்தாங்கல் பூந்தமல்லி சாலை கங்கை அம்மன் கோயில் அருகில் முத்தமிழ் கலை மன்றம் கலைநன்மணி கவிஞர் ஆ.தே. முருகையன் கலைக் குழுவினர் சார்பில் 15 கலைஞர்கள் பங்கு பெற்ற திராவிடத்தின் திரவியம் மூதறிஞர் கலைஞர் புகழ் பாடும் தெருக்கூத்து நிகழ்ச்சி நடைபெற்றது .

நிகழ்ச்சியில் சைதை மேற்கு பகுதி செயலாளர், 10 வது மண்டல குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், 168 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் எம்.சி, பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், பகுதி கழக நிர்வாகிகள், இ.முருகேசன், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, வட்ட கழக செயலாளர்கள், நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், சைதை மு.இராஜா, க.மணி, நேருநகர் எஸ்.பாட்சா ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

தெருக்கூத்து நிகழ்ச்சியை கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். கழக உயர்நிலை சட்ட திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, சிறப்புரையாற்றினார்,

நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி, துணை மேயர் மு. மகேஷ்குமார், சட்ட மன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ் , காரம்பாக்கம் கணபதி மற்றும் பாலவாக்கம் க.சோமு, மாவட்டக் கழக நிர்வாகிகள் த.விஸ்வநாதன் எம்.சி, மு.மனோகரன், வாசுகி பாண்டியன், பகுதிக் கழகச் செயலாளர்கள், கே.கண்ணன் எம்.சி, மு.இராசா எம்.சி, கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள், வழக்கறிஞர் எம் ஸ்ரீதரன் எம்.சி, சைதை மா.அன்பரசன், எஸ்.அரிகிருஷ்ணன், மணிகண்டன் நாடிமுத்து, கோல்டு பிரகாஷ், எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார்,

சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள், களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி. ஜானகிராமன், வட்ட செயலாளர்கள், சை.மு.சேகர், எஸ். பி.கோதண்டம், எம். நாகா, அட்கோ கமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள், டி.வி.நரசிம்மன், ச.சேகர், க. உமாபதி, வே.முருகன், ஜி.யோவான், இரா. சுதாபிரியன், ஏ.மஜீத், கிண்டி, ஆர்.எல்.செல்வம், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, பொன்.ஜெய்சிங், ஆர். ரவி, பால்கார்,ஏ.ரவி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆர்.டி. மூர்த்தி, எஸ்.எம். மோகன்தாஸ், ஈகை ஆர்.செல்வம், கே.எஸ். பாபு, க.ஒப்பிலாமணி, ஈகை,கோ.தனசேகரன், பகுதி அணிகளின் நிர்வாகிகள் கொடி.பாலா, மே.குணா, பா.பரத்குமார், சிலம்பரசன், உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட, நிர்வாகிகள், வட்ட கழக மூத்த முன்னோடிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்டத்திற்கு இன்று வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் - வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி, செப். 4 -

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்டம் சார்பில் தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் நாளை (05.09.2023 - செவ்வாய்க்கிழமை)நடைபெறும் கழக முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு,1500 கழக உடன்பிறப்புகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மற்றும் கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் வெள்ளை நிற ஆடை அணிந்து பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும்,முன்னதாக தென்காசிக்கு இன்று 4 ம் தேதி இரவு 7 மணி அளவில் வருவதை முன்னிட்டு தெற்கு மாவட்ட எல்லையான ஆலங்குளத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.





இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொண்டு உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும்.என தென்காசி தெற்கு மாவட் டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்களது அறிக்கை வருமாறு.

நாளை (05.09.2023- செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா நிகழ்வு முன்னிட்டு பிரம்மாண்ட மான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் ரூபாய் 10,000 ம் ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்வு,கழக உடன்பிறப்புகள் 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு ஆகியவற்றிலும் அதனைத் தொடர்ந்து கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தி லும் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்வில் கழக இளைஞர் அணி நிர்வா கிகள் மற்றும் இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி வார்டு, கிளை கழக இளைஞரணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞ ரணியினர் வெண் சீருடையில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

தென்காசி மாவட்டத்திற்கு முதன்முறையாக கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள்,கழக கொடியை கையில் ஏந்தி உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும்.

மேலும் தென்காசி சிவந்தி நகரில் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து 75 அடி உயர கம்பத்தில் கழக கொடியை ஏற்றி வைத்து சிறப்பிக் கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுவை மாநிலம் - அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா பொதுக்கூட்டம்!

## ஆ. இராசா, எம்.பி., எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்புரை!

புதுச்சேரி, செப். 4 -

புதுவை மாநிலம் அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் வீராம்பட்டினம் விளையாட்டுத் திடலில் நாளை 5-ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் நடைபெறுகிறது. பொதுக்குழு உறுப்பினர் பா.செ. சக்திவேல் தலைமை தாங்குகிறார். தொகுதி செயலாளர் வ.சீத்தாராமன் வரவேற்று பேசுகிறார்.

முன்னாள் செயற்குழு உறுப்பினர் பூ.சு. இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் நா. கோபாலகிருஷ்ணன், பொறியாளர் அணி அமைப்பாளர் ஆ. ஜெ. அருண்குமார், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கி. சங்கர், ஜெ.வேலன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.கலிவரதன், மீனவர் அணித் தலைவர் மா. ரமேஷ் (எ) தில்லையப்பன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை அமைப்பாளர் ரா. தியாகராஜன், தொகுதி அவைத் தலைவர் ர. பாண்டியன், துணைச் செயலாளர்கள் க. சிலம்புச்செல்வன், த. ராஜேந்திரன், வீ. நந்தினி, பொருளாளர் க. மெய்யழகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கு. வினோத்குமார், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சு. முகுந்தன், மீனவரணி துணை அமைப்பாளர்கள் த. சுப்புராயன், நா. மதிவாணன், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர். சே. பாலபாரதி, இலக்கிய அணி துணை அமைப்பாளர் அ. ஜபருல்லா, தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க. அரசு, செயற்குழு உறுப்பினர்கள் சி. மதுரைக்குமார், சி. ஜீவானந்தம், சி. குமார், பா. விஜயமுருகன், மூ. ரமேஷ், சு. சேரலாதன், க. சேதுபதி, சு. பரூக் (எ) ஆறுமுகம், அ. அருணாச்சலம், வ. பூபாலன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா, எம்.பி., புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா ஆகியோர் கலந்து கொண்டு, கலைஞர் நூற்றாண்டு விழாயையொட்டி நிறுவப்பட்டுள்ள கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், தொடர்ந்து நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ.,, துணை அமைப்பாளர்கள் எ.கே. கல்யாணி குமார், அ. தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. சுப்புராயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி, அ. சோமசுந்தரம்,

ந. தங்கவேலு, ப. செல்வநாதன், சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், வீ. சண்முகம், ஆர். கோகுல், எஸ். தர்மராஜன், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம். ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழிய பாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், ச. அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

கூட்டத்தின் பா.செ.தினகரராசு நன்றி கூறுகிறார்.

தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு!

# மாவட்ட-மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் - இடம், தேதி மாற்றம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் வருகிற செப்.6 நடைபெறவிருந்த நிலையில், இடம், தேதி மாற்றம் செய்யப்பட்டு 07092023 வியாழக்கிழமை அன்று சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. காலை 10 மணிக்கு துவங்கும் இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பொறுப்பாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக்கின்றனர்.

இதில், அனைத்து மாவட்ட, மாநகர கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூகநீதி மற்றும் மதசார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள், உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப்படங்களாக. கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு



திருத்தணி நகர தி.மு.க. முன்னாள் வட்டப் பிரதிநிதியும் கழக மூத்த முன்னோடியுமான எல்.வி. சீனிவாசன் உடல்நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வரும் நிலையில் மருத்துவ செலவிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ரூ. 10,000 நிதி உதவி வழங்கினர். உடன் திட்ட குழு உறுப்பினர் டி.எஸ்.ஷியாம் சுந்தர், மாவட்ட பிரதிநிதி நகர மன்ற உறுப்பினர் கே.எஸ்.அசோக்குமார், திருவள்ளூர் மேற்குமாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

அணிச்செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜி.ரிஸ்வான் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஷேக்வாகித், பி.எஸ்சி., (2226, கபூர் சாகிப் தெரு, பள்ளியம்பட்டு கிராமம், செஞ்சி - 604 205) அவர்கள் மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணாஅறிவாலயம்" **தயாநிதிமாறன் எம்.பி.,**
சென்னை 18. செயலாளர்,
நாள் : 03.09.2023. தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டுஅணி

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## விழுப்புரம் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

அணிச்செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட கே.எஸ். எம்.மொக்தியார் அலி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ரோமியன், பி.இ., (3, மாரியம்மன் கோவில் தெரு, பெரும்புகை, செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்) அவர்கள் விழுப்புரம் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணிநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணாஅறிவாலயம்" **டி.ஆர்.பி. ராஜா.**
சென்னை 18. செயலாளர்,
நாள் : 03.09.2023. தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (03.09.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 139 வது வார்டு, ஜாபர்கான்பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளி, 140 வது வார்டு, மேற்கு மாம்பலம், சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடம் மற்றும் 142 வது வார்டு, மாந்தோப்பு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், நரிக்குடி குறுவட்டம், இசலி கிராமம் சண்முக முனீஸ்வரன் கடந்த 06.08.2023 அன்று மின்னல் தாக்கி இறந்ததன் பொருட்டு பேரிடர் நிவாரண நிதியின் மூலம் ரூ.4,00,000/ (ரூபாய் நான்கு இலட்சம்) இறந்த நபரின் மனைவி திருமதி. யோகிதா அவர்களுக்கு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்கான ஆணையை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்!

# தமிழ்நாட்டில் 100 தொகுதிகளில் - பயனாளிகள் பதிவு செய்யும் 100 சிறப்பு முகாம்கள்!

## சைதையில் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.4-

தமிழ்நாட்டில் 100 தொகுதிகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாம் ஒரே நாளில் நடத்தப்படும் என்று சைதாப்பேட்டை தொகுதியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை மூன்று இடங்களில் தொடங்கி வைத்து பேசுகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அதன் விபரம் வருமாறு:

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (03.09.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 139 வது வார்டு, ஜாபர்கான் பேட்டை, சென்னை உயர் நிலைப் பள்ளி, 140 வது வார்டு, மேற்கு மாம்பலம், சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடம் மற்றும் 142 வது வார்டு, மாந்தோப்பு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 23.07.2009 அன்று முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 1.43 கோடி குடும்பங்கள் பயனாளிகளாக சேர்க்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால் 11.01.2022 முதல் 5 ஆண்டுகளுக்கு ரூ.7,730 கோடி (ஆண்டுக்கு ரூ.1,546 கோடி) இத்திட்டத்தின் மூலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் யுனிடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் அரசு மருத்துவமனைகள் 853, தனியார் மருத்துவமனைகள் 969 ஆக மொத்தம் 1822 மருத்துவமனைகள் இக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றன. இக்காப்பீட்டுத்திட்டத்தில் 1513 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறைகளும், 8 சிறப்பு அறுவை சிகிச்சை முறைகளும், 52 முழுமையான பரிசோதனை முறைகளும், 11 தொடர் சிகிச்சை முறைகளும் உள்ளன. ஒன்றிய அரசும் மற்றும் தமிழ்நாடு அரசும் இணைந்து 11.09.2018 அன்று இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 23.09.2018 அன்று முதல் துவங்கப்பட்டது. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டு 2023 செப்டம்பர் மாதம் 5 ஆண்டுகள் நிறைவடைகிறது.

**மாநில அரசின் பங்களிப்பு!**

தமிழ்நாட்டில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உள்ள 1.43 கோடி குடும்பங்களுக்குள் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியாக 86,48,748 குடும்பங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளனர். இத்திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு ஓர் ஆண்டிற்கு ரூ.5 இலட்சம் வரை காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை மேற்கொள்ளலாம். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்களிப்பு 60 : 40 விழுக்காடு ஆகும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் 23.07.2009 முதல் 15.08.2023 வரை 1,30,85,392 பயனாளிகள் ரூ.12,091 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர். 1,44,59,810 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.849/ வீதம் மொத்த காப்புறுதி தொகை ரூ.1227,63,78,690/(1227.63 கோடி) ஆகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியான கணக்கெடுப் பின்படி, 86,48,748 குடும்பங்களுக்கு ரூ.849/ வீதம் கணக்கிடப்பட்ட மொத்த காப்பீட்டுத் தொகை - ரூ.734,27,87,052/ (ரூ.734.27 கோடி) ஆகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியான கணக்கெடுப் பின்படி, 86,48,748 குடும்பங்களுக்கு நிர்வாக கட்டணம் ரூ.50/வீதம் ரூ.43,24,37,400/ (ரூ.43.24 கோடி) பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் மொத்த காப்புறுதி கட்டணத் தொகை ரூ.7,77,52,24,452/ (ரூ.777.52 கோடி) ஆகும்.

பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 60 விழுக்காடு ரூ.466,51,34,671/ (ரூ.466.51 கோடி) பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தில் மாநில அரசின் பங்களிப்பு 40 விழுக்காடு ரூ.311,00,89,781/ (ரூ.311 கோடி) ஆக மொத்தம் மொத்த செலவினம் ரூ.761,12,44,019/ (ரூ.761.12 கோடி) ஆகும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீடு திட்ட பயனாளிகளுக்கும் சிகிச்சை வழங்கப்படுவதுடன், பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீடு திட்ட அட்டை பெற்றுள்ள பிற மாநிலத்தவர்களுக்கும் சிகிச்சை வழங்க உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. 18.09.2018 முதல் 28.08.2023 வரையிலான முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டத்திலிருந்து மொத்த பயனாளிகள் (1.43 கோடி குடும்பங்களில்) 31,27,029 பேர் ரூ.4,780 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர். இதில் ஒருங்கிணைந்த பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீட்டு திட்டத்தின் கீழ் (86,48,748 இலட்சம் குடும்பங்களில்) 16,75,403 பயனாளிகள் ரூ.2,574 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர்.

**மருத்துவக் காப்பீடு தொடர்பான ஒப்பீடு:**

கடந்த ஆட்சியில் மருத்துவ காப்பீட்டுக்கான பிரிமியம் தொகை ஒரு வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.699/ ஆக இருந்தது, இந்த ஆட்சியில் ரூ.849/ ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் காப்புறுதித் தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.2 இலட்சமாக இருந்தது, தற்போதைய ஆட்சியில் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

கடந்த ஆட்சிக்காலத்தில் சிகிச்சை முறைகள் 1450 ஆக இருந்தது, தற்போதைய ஆட்சியில் 1513 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970, தற்போதைய ஆட்சியில் 1829 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டு எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் பிரத்யேக சிகிச்சை முறைகளின் எண்ணிக்கை 2, தற்போதைய ஆட்சிக் காலத்தில் 8 ஆக உயர்ந்துள்ளது. அந்த வகையில் காப்பீட்டு திட்டம் என்பது பெரிய அளவில் பயன்பாட்டில் இருக்கின்றது. அதேபோல் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் பெரிய அளவில் இன்னொரு சிறப்பான திட்டமும் உள்ளது. இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 திட்டத்தின் படி, 2021 டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் மேல்மருவத்தூர் மருத்துவ கல்லூரியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

விபத்துகளில் சிக்குபவர்களுக்கு உடனடியாக அவர்களைக் காக்கும் பொருட்டு, முதல் 48 மணி நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் தரும் வகையில் அந்தத் திட்டம் அப்போது தொடங்கி வைக்கப்பட்டது. அத்திட்டத்தின் மூலம் இதுவரை பயன்பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 1,81,860 பேர், இதன் மூலம் அரசின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ.159.48 கோடி ஆகும். இதில் அரசு மருத்துவமனைகளில் 237களிலும், தனியார் மருத்துவமனைகள் 455களிலும் ஒட்டு மொத்தமாக 692 மருத்துவமனைகளில் இத்திட்டம் பயன்பாட்டில் இருக்கின்றது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை பொறுத்த வரை இந்தியாவிற்கே வழிகாட்டும் அமைப்பாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் யாரும் விடுபட்டு போகக்கூடாது என்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்த சிறப்பு முகாம்கள் இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது. மிக விரைவில் தமிழ்நாட்டில் 100 தொகுதிகளில் 100 சிறப்பு முகாம்கள் ஒரே நாளில் நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், உயரலுவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கழக மகளிரணிப் புரவலர் - மறைந்த

# திருமதி நூர்ஜகான் பேகம் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு - பொன்.முத்துராமலிங்கம் - டி.கே.எஸ்.இளங்கோவன் - ஐ.பி.செந்தில்குமார் மரியாதை!

திண்டுக்கல், செப்.4-

கழக மாநில மகளிரணி புரவலர் மறைந்த நூர்ஜஹான் பேகம் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி செப்டம்பர் 1 ஆம் தேதி திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழநி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில் குமார், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன், கழக முன்னாள் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சத்யா பழனிக்குமார், தலைவர் கலைஞர் அவர்களின் செய்தித் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற மருத விநாயகம், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகர துணை மேயரும் மாநகர் செயலாளருமான ராஜப்பா,

கழக சொற்பொழிவாளர்கள் கரூர் முரளி, சரவெடி சரத்பாலா, போடி காமராஜ், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக மற்றும் திண்டுக்கல் மாநகர் கழக நிர்வாகிகள், திண்டுக்கல் மாவட்ட மற்றும் மாநகர் கழக மகளிரணி நிர்வாகிகள், திண்டுக்கல் நகர முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்று, நூர்ஜகான் பேகம் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு வகிதா பேகம் மற்றும் திண்டுக்கல் மாநகர, பகுதிக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை! மாவட்ட ஆட்சியர் ச.உமா தலைமை!

# மாற்றுத் திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.6.24 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நாமக்கல், செப். 4 -

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், தங்கசாலை தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாமினை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்து, மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் வழங்கப்படுவதை பார்வையிட்டார்.

இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 7 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரம், 7 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, தமிழ்நாடு ஊரக வாழ்வதாரம் சார்பில் நிதியுதவி, விசைத்தறி அமைக்க நிதிஉதவி, ஆடு வளர்ப்பு, வருவாய் துறையின் சார்பில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, கூட்டுறவுத்துறையின் சார்பில் கடனுதவி, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்ட அடையாள அட்டை என மொத்தம் 47 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.6.24 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக, நாமக்கல் தெற்கு அரசு மேல்நிலைப் பள்ளியில், பட்டுவளர்ச்சித் துறை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மல்பெரி மரக்கன்றுகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராம லிங்கம் ஆகியோர் நட்டு வைத்தனர்.

இன்று (4.9.2023) மாலை குன்றத்தூரில் நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் அவசரக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!




காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (4.9.2023, திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. செப்டம்பர் 15 அன்று முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் காஞ்சிபுரத்திற்கு வருகை குறித்து. 2. கழக முப்பெரும் விழா 3. கழக வளர்ச்சி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்,**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



கழக மாநில மகளிரணிப் புரவலர் மறைந்த நூர்ஜஹான் பேகம் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் பழநி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில் குமார், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன், கழக முன்னாள் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சத்யா பழனிக்குமார், தலைவர் கலைஞர் அவர்களின் செய்தித் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற மருத விநாயகம்,, திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகர துணை மேயரும் மாநகர் செயலாளருமான ராஜப்பா, கழக சொற்பொழிவாளர்கள் கரூர் முரளி, சரவெடி சரத்பாலா, போடி காமராஜ், உள்ளிட்ட பலரும் நூர்ஜகான் பேகம் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சிக்கு வகிதாபேகம் ஏற்பாடு செய்திருந்தார்.



சென்னை கிழக்கு மாவட்டம்,வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் பெ.வின்சென்டின் இன்லெஜெண்ட்ஸ் லா அசோசியேஷன்'வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசகர் நிறுவனத்தின் புதிய அலுவலகம் எழும்பூரில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பழ.செல்வகுமார் தலைமையில்

# சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் கூட்டம்!

சென்னை செப்:4

சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மாநிலத் துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்தும் பசுமை காடுகள் அமைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் பி.வெங்கடேசன் துணை அமைப்பாளர்கள் ஏகா.கார்த்திகேயன், பா.பாலஉமாபதி, சா. இளஞ்செழியன், சுதர்சன்( ஏ) மாறன், வேதா செந்தில் கலந்து கொண்டனர்.

# கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்து: உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.4-

கடலூர் மாவட்டத்தில் சாலைவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்ட (3.9. 2023) அறிவிப்பு வருமாறு :

கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்கோயில் வட்டம், மோவூர் மேற்கு கிராமம், பிரதான சாலையில் நேற்று (292023) இரவு முட்டம் கிராமத்திலிருந்து காட்டுமன்னார்கோயில் நோக்கிச் சென்ற இருசக்கர வாகனமும், காட்டுமன்னார்கோயிலில் இருந்து சென்ற நான்கு சக்கர வாகனமும் எதிர்பாராதவிதமாக மோதி ஏற்பட்ட விபத்தில் கடலூர் மாவட்டம், முட்டம் கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல், (த/பெ. மகேந்திரன்) (வயது 25) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உயிரிழந்த திரு.சக்திவேல் அவர்களின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் திரு. அஜித் மற்றும் திரு.சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்திரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் பயிலும்

# மாணவ-மாணவிகளின் உடல் ஊட்டச்சத்துப் பிரச்சினை நீங்கியுள்ளது!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு வரவேற்றுப் பாராட்டு!

சென்னை, செப்.4-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவிகளின் ஊட்டச்சத்து பிரச்சினை நீங்கி, உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக ‘தி ஹிந்து’ ஆங்கில நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது. இதேபோல் அரசு பள்ளிகளில் மாணவர்களின் வருகை கணிசமாக உயர்ந்திருப்பதாகவும் அந்த நாளேடு வரவேற்பு தெரிவித்துள்ளது.

சுடச்சுட சாம்பாருடன் பொங்கல், கிச்சடி என களைகட்டியிருக்கும் இந்த உணவு வகைகள் அளிக்கப்படும் இடம் ஆடம்பர ஓட்டலோ, விடுதியோ அல்ல. முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படும் அரசு தொடக்க பள்ளிகள் தான் இவையாகும்.

வசதிபடைத்தவர்களின் குழந்தைகள், தனியார் பள்ளிகளில் கல்வி பயிலும் நிலையில், ஏழை மக்கள், கூலித் தொழிலாளர்கள் உள்ளிட்ட சமூகத்தில் நலிவடைந்தவர்களின் வாரிசுகள் அரசு பள்ளிகளையே கல்விக்காக நம்பியுள்ளனர். தொழிலாளர் குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தையர், அதிகாலையில் எழுந்து பசியோடு அன்றைய தின வேலைக்குச் சென்றுவிடும் நிலையில், அவர்களின் குழந்தைகள் காலை நேரத்தில் அதே பசியுடன் பள்ளிக்கு வந்து கல்வி பயிலும் நிலை இருந்தது. இதனால் ஊட்டச்சத்து குறைபாடு, எடை குறைவு போன்ற பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டனர்.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, நாட்டின் எதிர்கால சந்ததியினரை வளமான சந்ததியினராக உருவாக்க வேண்டுமென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, இந்தியாவிலேயே முதல்முறையாக அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக கடந்த 2022-ஆம் ஆண்டு 1,545 அரசு தொடக்க பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ், 1 முதல் 5-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் சுமார் 1 லட்சத்து 14 ஆயிரம் பேருக்கு அரிசி, கோதுமை உணவுகளும், பொங்கல், கிச்சடி, கேசரி, ஸ்வீட் பொங்கல், சேமியா உப்புமா, சாம்பார் உள்ளிட்ட சுவையான உணவுகளும் அளிக்கப்பட்டன.

இதையடுத்து கடந்த ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதியன்று அனைத்து அரசு பள்ளிகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு விரிவுபடுத்தியது. ஆண்டுக்கு சுமார் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், 31 ஆயிரத்து 8 அரசு தொடக்க பள்ளிகளில் 17 லட்சம் மாணவ- மாணவிகளுக்கு காலை நேரத்தில் சுடச்சுட சத்தான உணவுகள் அளிக்கப்படுகின்றன.

அதிகாலையில் அரக்க பறக்க எழுந்து வேலைக்குச் செல்லும் ஏழைப் பெற்றோர், காலையில் பசி மயக்கத்தோடு பள்ளியில் இருக்கும் குழந்தைகளை நினைத்துக் கவலைபட்ட நிலையில், அவர்களின் கவலைகளைப் போக்கும் அருமருந்தாக உள்ளது.

இதேபோல், முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, அரசு தொடக்க பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவிகளின் ஆரோக்கியம் மேம்பட்டிருப்பதாகவும், ஊட்டச்சத்து குறைபாடு, உடல் எடை குறைவு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்திருக்கிறது.

2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதன் முதலில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 4 மாவட்டங்களில் உள்ள 1,545 அரசு தொடக்க பள்ளிகளில் 1,319 பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் மாணவர்களின் வருகை பதிவேடு 85 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளதென்றும், அதாவது 10 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படும் பள்ளிகளில் வருகை பதிவேடு, அதன் அருகேவுள்ள பள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 77 சதவீதம் வரை முன்னேற்றம் கண்டிருக்கிறது. அரசு தொடக்க பள்ளி தலைமை ஆசிரியர்கள் சிலர், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, வருகை பதிவேடு 2 மடங்கு அதிகரித்துள்ளது என மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றன.

இவ்வாறு ‘தி ஹிந்து’ நாளேட்டின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் அனைவருக்கும் கல்வி புகட்ட மேற்கொள்ளப்படும் சமூக நீதி திட்டங்களை கிண்டலடிக்கும் சில ஏடுகளுக்கு இந்த உண்மை சவுக்கடியாக இருக்கும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

### ஆதித்யா எல்-1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள

# தமிழ்ப் பெண்மணி நிகர்ஷாஜிக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப். 4 -

ஆதித்யா எல்.1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண்மணி நிகர்ஷாஜிக்கு அகம் மகிழ்ந்த பாராட்டுகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ளார்.

அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தென்காசி மாவட்டத்தின் செங்கோட்டையில் பிறந்து, சூரியனை ஆய்வுசெய்யும் இந்தியாவின் முதல் விண்கலமான ஆதித்யா எல்1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண்மணி நிகர் ஷாஜி அவர்களை அகமகிழ்ந்து பாராட்டுகிறேன்.**

**தமிழ்நாட்டின் மாநில அரசுப் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டத்தில் பயில்பவர்கள் திறத்திலும் தரத்திலும் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை தொடர்ந்து சந்திரயான் முதல் ஆதித்யா வரை நம் சாதனைத் தமிழர்கள் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றனர்.**

**இஸ்ரோவின் பெருமைமிகு திட்டத்துக்கு நிகர் சாஜி அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றிருப்பதைப் பார்த்து அவர்கள் குடும்பத்தினர் எத்தகைய பூரிப்பை, பெருமையை அடைந்திருக்கிறார்களோ அதே அளவுக்கு நானும் பெருமிதம் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.




கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் இரா.துரைராஜ் தலைமையில் திராவிடத்தின் திரவியம் மூதறிஞர் கலைஞர் புகழ் பாடும் தெருக்கூத்து நிகழ்ச்சியை அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைத்தார்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி மற்றும் பாலவாக்கம் க.சோமு, எஸ் . குணசேகரன், த.விஸ்வநாதன், மு.மனோகரன், வாசுகி பாண்டியன், எம்.கிருஷ்ணமூர்த்தி, கே. கண்ணன், மு.இராசா, மின்னல் கந்தப்பன், எம்.ஸ்ரீதரன், மா.அன்பரசன், தா.மோகன்குமார், மணிகண்டன், நாடிமுத்து, கோல்டு பிரகாஷ், எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், இ.முருகேசன், களக்காடி எல்லப்பன், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரி, மு.இராஜா, க.மணி, எஸ்.பாட்சா, சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், கமலநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்


பொன்னேரி நகர கழக செயலாளர், மு.பேரூர் து.தலைவர்
சேவைசுடர். வழக்கறிஞர். G.இரவிக்குமார் M.A., B.L.,
அவர்களின் மனைவி

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள்: 04.09.2023 திங்கட்கிழமை
மாலை 5.00 மணி
இடம்: எங்களது இல்லம், பெரியகாவணம்



பேராசிரியர். முனைவர். திருமதி. டாக்டர். தா.குளோரி M.A., M.A., M.Phil., Ph.D.,
அவர்களின் நினைவகம் மற்றும் படத்திறப்பிற்கு வருகை தரும்

கல்வியாளர் மதிப்புமிகு. T.J.கோவிந்தராசன் B.A., MLA அவர்கள்
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் – கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்

மதிப்புமிகு. துரை.சந்திரசேகர் M.A., B.L., MLA அவர்கள்
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைவர் – பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. Dr.K.பரிமளம் விசுவநாதன் MBBS., DGO.,
பொன்னேரி நகரமன்ற தலைவர், பொதுக்குழு உறுப்பினர்

மாநில, மாவட்ட நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகரம், பேரூர் நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், வார்டு செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்

வழக்கறிஞர். G.இரவிக்குமார் M.A., B.L.,
பொன்னேரி நகர கழக செயலாளர், மு.பேரூர் து.தலைவர்

பெங்குயின்

பொன்னேரி நகர தி.மு.க – திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

# 33 திராவிட மாடல் அரசு






# பாடநூல்களுக்கு அப்பால்...

பலருக்கும் புத்தகம் என்றால், அது பாடப் புத்தகம்தான். பாடப் புத்தகங்கள் ஒருவரை கல்வியில் தேர்ச்சி பெற வைக்கும். ஆனால், பாடப் புத்தகங்களைத் தாண்டியும் ஒருவர் மேற்கொள்ளும் வாசிப்புதான் அவருக்கு உண்மையான அறிவை வழங்கி, வாழ்க்கையில் தேர்ச்சி பெற வைக்கும்.

தமிழ்நாட்டில், பாடப் புத்தகங்களைப் பதிப்பிப்பதற்காகவே 1970-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி தொடங்கப்பட்டது, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம். பின்னர் 1993-இல் ‘தமிழ்நாடு பாடநூல் கழகம்’ என்றும், 2013-இல் ‘தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்’ என்றும் பெயர் மாற்றத்துக்கு உள்ளானது.

பெயர் மாற்றத்துக்கு உள்ளானதைத் தவிர, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அந்தக் கழகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நடைபெற வில்லை. இந்நிலையில், 2021-இல் மே மாதம் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** பொறுப்பேற்ற பிறகு, வியக்கத்தக்க மாற்றங்களும், விடியலுக்கான புதிய முன்னெடுப்புகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆம்... இதுவரை பாடநூல்களை மட்டுமே பதிப்பித்து வந்த பாடநூல் கழகம், இப்போது பாடநூல்களுக்கு அப்பாலும் நிறைய புத்தகங்களை அச்சிட்டு வருகிறது. கல்விப் பணிகளுடன் இப்போது இலக்கியப் பணிகளையும் அது மேற்கொண்டு வருகிறது.

## திசைதோறும் திராவிடம்

தமிழ்நாடு பாடநூல் கழகம் மேற்கொண்டு வரும் முக்கியமான வெளியீட்டுத் திட்டங்களில் முதன்மையானது **‘திசைதோறும் திராவிடம்’** திட்டம். 2021- ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது கல்வித்துறையால் முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் தமிழர் பெருமையைப் பேசும் இலக்கியங்கள், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் ஆகியவற்றை மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, தொ.பரமசிவனின் **‘அறியப்படாத தமிழகம்’**, சிலப்பதிகாரம் ஆகியவை ஆங்கிலத்திலும், திருக்குறளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய உரை தெலுங்கிலும், பூமணியின் **‘வெக்கை’** மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.




மேலும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், இந்த ஆண்டு **பழ.அதியமான் எழுதிய ‘வைக்கம் போராட்டம்’** எனும் ஆய்வு நூல், மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சராலும், கேரள முதலமைச்சராலும் வெளியிடப்பட்டது.

## முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்!

‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்’ என்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கும் விதமாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, 1970-களில் அறிவியல், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த சுமார் 875 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திட்டத்தை மீட்டெடுக்கும் வகையில், கடந்த ஆண்டு 45 துறைசார் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன.

இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற சென்னை சர்வதேசப் புத்தகத் திருவிழாவில், தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 5 மருத்துவ நூல்களை முதலமைச்சர் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, மேலும் 13 மருத்துவ நூல்கள் உட்பட சுமார் 80-க்கும் மேலான நூல்கள் இந்த ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

## 21 மொழிகளில் பெரியார்

இந்தியாவுக்காக தெற்கிலிருந்து நாம் பேச வேண்டிய நேரம் இது. அதற்கு முன்னோட்டமாக இந்திய மொழிகள் மட்டுமல்லாது, உலக மொழிகளும் என 21 மொழிகளில் தந்தை பெரியாரின் எழுத்துகள், பேச்சுகள், சிந்தனைகள் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

மேலும், அறிஞர் பெரியசாமி தூரன் தலைமையில் 1960-களில் தயாரிக்கப்பட்ட ‘கலைக்களஞ்சியம்’ ஆவணப் பதிப்பாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல அவர் குழு தயாரித்த **‘குழந்தைகள் கலைக்களஞ்சியம்’** நூலும் ஆவணப் பதிப்பாகத் தயாராகி வருகிறது. அதை முதலமைச்சர் விரைவில் வெளியிட உள்ளார்.

## இளந்தளிர் இலக்கியத் திட்டம்

புத்தகங்கள் என்றால், பாடப் புத்தகங்கள்தான் என்று பலரும் நினைப்பது போல, பாடம் அல்லாத பிற நூல்கள் என்று சொன்னால், அவற்றைப் பெரியவர்களுக்கான விஷயங்களாகவே பார்க்கும் போக்கு பலரிடையே உள்ளது. அதற்கு மத்தியில், குறிப்பிடத்தகுந்த அளவுக்குத் தமிழில் சிறார் இலக்கியங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்நாடு பாடநூல் கழகம் இதிலும் தனி முத்திரை பதித்து வருகிறது. **‘இளந்தளிர் இலக்கியத் திட்டம்’** என்ற முன்னெடுப்பின் கீழ் குழந்தைகளை சமூகத்தில் நல்ல குடிமக்களாக்கும் பொருட்டுக் கதை வடிவில் நிறைய நூல்கள் கொண்டு வரப் பட்டுள்ளன. குழந்தைகளை மூன்று பருவத்தினராக வகைப்படுத்தி, அவர்களின் வயதுக்கு ஏற்றபடியான நூல்களை, பாடநூல் கழகம் வெளியிட்டுள்ளது. உதாரணத்துக்கு, **‘குட் டச், பேட் டச்’** என்பதை விளக்கும் **‘என்னைத் தொடாதே’**, மாற்றுத்திற னாளிகள், இட ஒதுக்கீடு போன்ற சமூக நீதியைக் கற்றுத் தரும் நூல்கள் ஆகியவை குழந்தைகள், ஆசிரியர்கள் ஆகியோரிடையே மட்டுமல்லாது பெற்றோர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

## சிறப்பு வெளியீடுகள்

புத்தகங்கள் மட்டுமல்லாது வ.உ.சி.யின் 150-வது பிறந்த ஆண்டைச் சிறப்பிக்கும் வகையிலான இதழ், திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பற்றிய வெளியீடுகள், ‘பொருநை’, ‘கீழடி’ அகழாய்வுகளின் அறிக்கைகள் போன்ற நிறைய சிறப்பு வெளியீடுகளையும் அவ்வப்போது பாடநூல் கழகம் வெளியிட்டு வருகிறது.

எல்லாவற்றுக்கும் மகுடம் சூட்டியதுபோல 2023 ஜனவரியில் முதலாவது ‘சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா’வை பொதுநூலகத் துறையோடு இணைந்து பாடநூல் கழகம் நடத்தியது. அதில் 30 நாடுகளிலிருந்து எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் கலந்துகொண்டனர். 350-க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

> ➢ தமிழ்ப் புனைவு, அபுனைவு இலக்கியப் படைப்புகள் சுமார் 50-க்கும் மேலானவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
>
> ➢ இலக்கிய மொழிபெயர்ப்புப் படைப்புகளை, பெங்குயின், ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்ப்பர் காலின்ஸ் உள்ளிட்ட ஆங்கிலப் பதிப் பகங்களுடன் இணைந்து பாடநூல் கழகம் வெளி யிடுகிறது.
>
> ➢ மருத்துவ மொழிபெயர்ப்பு நூல்களை, அறிவியல் புத்தகங்களைப் பதிப்பிப்பதற்குப் பெயர் பெற்ற சர்வதேசப் பதிப்பகமான ’எல்ஸிவ்யர்’ மூலம் கொண்டு வருகின்றது பாடநூல் கழகம்.
>
> ➢ நாட்டுடைமையாக்கப்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள், நூற்றாண்டு காணும் எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியவற்றையும் பாடநூல் கழகம் பதிப்பிக்கிறது.

அந்தப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை ஏற்பாடு செய்யும் முன்பு கடந்த ஆண்டு அக்டோபரில் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் சிலர், ஜெர்மனி ஃப்ராங்க்ஃபர்ட்டில் நடைபெற்ற **‘உலகப் புத்தகத் திருவிழா’**வுக்குச் சென்று, இங்கும் அதுபோன்ற திருவிழாவை நடத்துவதற்கான அனுபவங்களைப் பெற்று வந்தார்கள். அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு அக்டோபரில் ஃப்ராங்க்ஃபர்ட்டில் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் சார்பாக, தமிழ்நாடு பாடநூல் கழகம் தனது வெளியீடுகளைக் காட்சிப்படுத்த இருக்கிறது.

அறிவை வளர்ப்பது மட்டுமல்ல... மனதைப் பண்படுத்துவதும்தான் சிறந்த மனிதர்களை உருவாக்கும். அதைத்தான் ‘திராவிட மாடல் அரசு’ பாடநூல் கழகம் வழியாகச் செய்துவருகிறது..!

**...சாதனை தொடரும்**

## முதல்வர் கவனம் பெற்ற ஓவியம்!




**கா**லை உணவுத் திட்டம் பல வகைகளிலும், பல திசைகளிலும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது. அதன் பயனாளிகளான பள்ளிப் பிள்ளைகள் மனதிலும் மிகப்பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

கற்றலில் மட்டுமல்ல, அவர்கள் ஆற்றலிலும் பாய்ச்சலை நிகழ்த்தி வருகிறது. அதை ஓவியமாக வரைந்துள்ளனர் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்கள், காலை உணவுத் திட்டத்தினை முதல்வர் தொடங்கி வைத்த காட்சிகளைக் கரும்பலகையில் ஓவியமாக வரைந்துள்ளனர். அந்தப் படத்தினை முதல்வர் பார்வைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என விரும்பியுள்ளனர். அதேபோலவே அந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவி, நமது முதல்வர் கவனத்துக்கும் வந்து பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். காலை உணவுத் திட்டம் மிகப் பெரிய மாற்றங்களை நிகழ்த்தி வருவதை ஓர் ஓவியத்தின் பயணம் சொல்லிவிட்டது.

## :ப்ளாஷ்பேக்



### பணிக்குப் பாராட்டு!



தமிழருவி

**1996**-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்துக்கு, திருச்சிக்கு வந்த தளபதி அவர்கள் திருச்சி, சங்கம் ஹோட்டலில் தங்கி இருந்தார். அப்போது, அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் கழகத்துக்கு ஆற்றும் பணியினைப் பாராட்டும் வகையில், அய்யா ஆதிமூலம், அண்ணன் அன்பில் பொய்யாமொழி, தி.ப.மாயவன், திருச்சி சிவா ஆகியோர் என்னை தளபதியாரிடம் அறிமுகப் படுத்தி வைத்தனர். அவர் கழகத்துக்காக மேலும் பணியாற்ற வேண்டும் என்று என்னைப் பாராட்டினார். 72 வயது ஆகியும் என் இல்லத்தில் இந்தப் புகைப்படத்தைப் பார்க்கின்ற போதெல்லாம் உற்சாகமாக 27 வயது இளைஞர் போல் கழகப் பணியாற்றிட உந்துதல் தருகிறது.

**-சி.தமிழருவி,**
**ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர், அந்தநல்லூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தூக்குமேடை நாடகம்

**1952-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ கழகத்தின் சார்பில் நிதி திரட்டப்பட்டது. அந்தப் பணிக்குப் பொறுப்பேற்றவர் கலைஞர். அந்த முயற்சிக்காக கலைஞர் எழுதிய ‘தூக்குமேடை’ நாடகம் பல இடங்களில் நடத்தப்பட்டு நிதி திரட்டப்பட்டது. சங்கரன் கோயிலில் நாடகத்துக்கு ஏற்பாடு செய்தவர், வசூலான பணத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். சென்னை திரும்ப பணமில்லாமல் நின்ற கலைஞர், சிவாஜிகணேசன், சி.வி.எம்.அண்ணாமலை உள்ளிட்ட குழுவுக்கு, தூத்துக்குடியில் கே.வி.கே.சாமி உள்ளிட்ட தோழர்கள் உதவினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 230




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131